

வ.ந. கிரிதரன்
வ.ந.கிரிதரன்
பாடல்கள்

# வ.ந.கிரிதரனின் பாடல்கள்!

‘அனைவருடனும் அறிவினைப் பகிர்ந்து கொள்வோம்’

பதிவுகள்.காம்
**2024**

காலத்துக்குக்  காலம் மானுட குலத்துக்கு ஆரோக்கியமான பங்களிப்பினை நல்கக் காரணமாக இருந்த, இருக்கும் அறிவியல் அறிஞர்கள் அனைவருக்கும் இத்தொகுப்பினைச் சமர்ப்பணம் செய்கின்றேன்.

## என்னுரை!

தொழில் நுட்பத்தின் வளர்ச்சி மானுடருக்கு ஆரோக்கியமான பங்களிப்பை நல்கி வருகின்றது. செயற்கை அறிவும் அத்தகைய தொழில் நுட்பமே. எனது பாடல் வரிகளுக்குச் செயற்கைத் தொழில் நுட்பம் இசையமைத்ததுடன் அல்லாது பாடுவதற்கான குரலையும் வழங்குகின்றது. பாடலாசிரியர் ஒருவர் தன் பாடல் வரிகளைப் பல் வகைகளில் இசையமைத்து, பாட வைத்துப் பரிசோதிக்க இத்தொழில் நுட்பம் வழி சமைத்துள்ளது. அவரது பாடல் எழுதும் திறமையினையும் வளர்ப்பதற்கும் இத்தொழில் நுட்பம் உதவுகின்றது.

இவ்விதமாகச் செயற்கை அறிவு இசைமையத்துப் பாடிய பாடல்களை நீங்கள் எனது யு டியூப் சானலான வ.ந.கிரிதரனின் பாடல்கள் சானலில் கேட்டு மகிழலாம். அதற்கான இணைய இணைப்பு - https://www.youtube.com/@girinav1

அட்டைப்பட ஓவியம்: செயற்கை அறிவு (AI) | இசை & குரல்: செயற்கை அறிவு (AI) SUNO

என்னுரை!.......................................................................................................... 3
1. பாரதியின் பாட்டென்றால்.............................................................................6
2. யாழ் பொதுசன நூலக நினைவுகள்!............................................................... 8
3. ஆழ் மனக்குதிரையை அடக்கு நண்பா..............................................................11
4. சுயமரியாதை இழக்காதே............................................................................. 13
5. எதிர்காலம் ஒளிமயமாகும்...........................................................................13
6. நான் இயற்கையின் குழந்தை.......................................................................... 15
7. கல்லுண்டாய்ப் பயணங்கள்!........................................................................... 16
8. நகரைச் சுத்தமாக்குவோம்............................................................................ 19
9. அறிந்தால் அறிவியடா என் பெரு வரையே!..................................................... 20
10. அறிந்தால் அறிவியடி அருவியே!................................................................21
11. முகமூடிகள் உலகில்.................................................................................... 23
12. அறிவுரை கூறு கண்ணா!............................................................................24
13. கார்ல் மார்க்ஸ்......................................................................................... 26
14. பகுத்தறியும் பண்பு வேண்டும் நண்பா..........................................................27
15. சமநீதி பிறக்கட்டும் எங்கும்........................................................................ 28
16. ஓராயம் என்றோர் ஒளிர் திட்டம்!...............................................................29
17. நாங்கள் கவிகள்!....................................................................................... 31
18. காலவெளிக்காட்டி வல்லுனன்!.................................................................... 33
19. கவிதை: இந்த மனிதர்! இந்த உலகம்! இந்தப் பிரபஞ்சம்!................................... 35
20. அறிஞர் அண்ணா!...................................................................................... 37
21. எண்ணம் நிறைவேறும்...............................................................................39
22.கனவில் வந்தாய்!........................................................................................41
23. குறிப்பேட்டுப் பதிவுகள் - களத்தில் குதித்திடு!................................................. 43
24. அமெரிக்கத் தடுப்பு முகாம் அனுபவங்கள்!...................................................... 45
25. ஆழ்மனத்தில் அழியாத நினைவுச் சித்திரங்கள்..................................................47
26. இயற்கையின் பேரழகு................................................................................ 49
27. தரணித் தடாகத்தில் அன்புத்தாமரை பூக்கட்டும்............................................... 51
28. என் மோகம் தீர்க்க மாட்டாயா அன்பே!......................................................... 52
29. எம்ஜிஆர் படப் பாடல்கள்............................................................................54
30. தமிழும் திராவிடமும்................................................................................. 56
31. விண்ணைப் போன்றதொரு நூலகம்............................................................... 58
32. எண்ணிம நூலகம் 'நூலகம்'........................................................................... 60
33. நெஞ்சில் நிறைந்தாய் கண்ணம்மா!................................................................ 62
34. ஆர்டிஸ்ட் மணியத்தின் கட் அவுட்டுகள்!........................................................ 63
35. செயற்கை அறிவுத் தொழில் நுட்பம்............................................................... 65
36 படைப்பும், விடை தேடும் நெஞ்சும்................................................................ 66
37. மழைபோல் பொழிவோம்!............................................................................. 67

**38.** ஒட்டகங்கள்!....................................................................................................**69**
**39.** வாழ்க்கை எனும் சதுரங்கம்!.............................................................................. **70**
**40.** தர்க்கம் செய்வோம். ஞானம் பெறுவோம்...........................................................**71**
**41.** காலையின் வருகை........................................................................................ **72**
**42.** இயற்கையைப் பேணுவோம்...............................................................................**73**
**43.** கறுப்பு ஜூலை...............................................................................................**74**
**44.** நவீன விக்கிரமாதித்தனின் 'காலம்'!..............................................................**75**
**45.** அதி மானுடரே! நீர் எங்கு போயொளிந்தீர்?.......................................................**77**
**46.** எங்கோயிருக்கும் ஒரு கிரகவாசிக்கு............................................................... **79**
**47.** காலவெளிச்சித்தனின் மடலொன்று!.................................................................**81**
**48.** ஆசை!..........................................................................................................**83**
**49.** தாயே!...........................................................................................................**84**
**50.** நட்சத்திரத் தோழியரே அவனை அழைத்து வாருங்கள்!........................................**86**
**51.** யாழ்ப்பாணத்து மொக்கங் கடை!......................................................................**88**
**52.** மேப்பிள் மண்ணின் மைந்தர்கள்!.................................................................... **90**
**53.** காலவெளிப்பயணியின் நெடும் பயணம்.......................................................... **92**
**54.** நாற்பரிமாண ஓவியத்தை இங்கு வரைந்தவர் யார் கண்ணா!............................ **94**
**55.** வான் பார்க்கும் யாழ் மண்ணின் வழுக்கியாறு!...............................................**96**
**56** ஒளி வீசி ஓய்வோம்.........................................................................................**98**
**57.** தனிமைச் சாம்ராஜ்யத்துச் சுதந்திரப் பறவை!..................................................**100**
**58.** தீக்கோழிகளே தலையை வெளியே எடுங்கள்....................................................**101**
**59.** யாழ் இந்து நினைவுகள்.................................................................................. **103**
**60.** இருப்பதிகாரம்...............................................................................................**105**
**61.** கண்ணா!........................................................................................................ **107**
**62.** நான் பிரபஞ்சத்துக் குழந்தை........................................................................**108**
**63.** என் பிரியம் மிகு யாழ் மண்ணே!.....................................................................**109**

## 1. பாரதியின் பாட்டென்றால்

பாரதியின் பாட்டென்றால் எனக்கு
பாரில் அதைவிட வேறொன்றுமில்லை.
எனக்கு.
வேறொன்றுமில்லை.

சிந்தனைத் தெளிவில், எளிமைமிகு சொல்லில்
சிந்திக்க வைக்கும் அவன் பாடல்கள் என்னைச்
சிந்திக்க வைக்கும் அவன் பாடல்கள்.

பாரதியின் பாட்டென்றால் எனக்கு
பாரில் அதைவிட வேறொன்றுமில்லை.
எனக்கு.
வேறொன்றுமில்லை.

இருப்புக்கு வழி காட்டும் பாடல்கள்.
விருப்பை மானுட விருப்பை வெளிப்படுத்தும்.

இன்று புதிதாய்ப் பிறந்தோம்' என்று
அன்று அவன் சொன்ன அறிவுரை.

உளவியலை உணர்ந்தவன் பாரதி
மானுட
உளவியலை உணர்ந்தவன் பாரதி.

'அச்சமில்லை. அச்சமில்லை, அச்சமில்லை' என்றான்.
அகத்தில் நிலைக்க வைக்கும் சுய மந்திரமல்லவா
அடுத்தடுத்து ஒன்றை உரைப்பது.

உளவியலை உணர்ந்தவன் பாரதி
மானுட
உளவியலை உணர்ந்தவன் பாரதி.

சூழலை மீறிச் சிந்தித்தவன் பாரதி.
சூழ இருந்த மடமைகளைச் சாடியவன் பாரதி.
மண்ணில் மானுட விடுதலைக்காய்,
மடமைகளின் விடுதலைக்காய்,

பெண் விடுதலைக்காய், தீண்டாமைப்
பிரிவுகளின் விடுதலைக்காய்ப்
பாடியவன் பாரதி. என் பாரதி.

இயற்கையை நேசித்தான்.
இன் அன்பினைப் போதித்தான்.
இருப்பின் அர்த்தம்தனை யோசித்தான்.
இவனைப் போல் வேறு யாருளர்.

பாரதியின் பாட்டென்றால் எனக்கு.
பாரில் அதைவிட வேறொன்றுமில்லை.
எனக்கு.
வேறொன்றுமில்லை.

காதலைப் பாடினான்.
கலைகளைப் பாடினான்.
மானுட ஆளுமைகளைப் பாடினான்.
மதங்களைப் பாடினான்.
இருப்பிலுள்ள அனைத்தையும் பாடினான்.
இல்லாதவை பற்றியும் பாடினான்.
மானுட வழிகாட்டிகள் இவன் பாடல்கள்.
மானுட வழிகாட்டிகள் இவன் பாடல்கள்.

பாரதியின் பாட்டென்றால் எனக்கு
பாரில் அதைவிட வேறொன்றுமில்லை.
எனக்கு.
வேறொன்றுமில்லை.

**2.** யாழ் பொதுசன நூலக நினைவுகள்!

யாழ் பொதுசன நூலகத்தில்
வாழ்நாளில் கழித்த பொழுதுகளை
எப்படி மறப்பேன். எப்படி மறப்பேன்.

என்றும் என்னுள் இருக்கும் நினைவுகள்,

இன்று நினைக்கையில் அங்கு
அன்று நான் கழித்த தருணங்கள்
அலையலையாக எழுகின்றன.

எப்படி மறப்பேன்.
எப்படி மறப்பேன்.

ஒன்று விட்ட அக்கா ஒருத்தியுடன்
அன்று நான் சென்றதுதான் முதல் தடவை.
எட்டி எட்டி விரைந்து நடப்பேன்.
என்னுடன் ஈடு கொடுக்க முடியாத
அக்கா கத்துவாள். அக்கா கத்துவாள்.
"ஏய் என்னடா இந்த நடை நடக்கிறே.
எட்டிப் போகாதேடா. மெதுவாப் போடா.
மூச்சு வாங்குது' என்பாள் அவள்.

எப்படி மறப்பேன்.
எப்படி மறப்பேன்.

வாரத்தில் பல தடவைகள் அங்கு செல்வேன்.

நான் வணங்கும் ஆலயங்கள்
நூலகங்களே.

யாழ் பொதுசன நூலகமும்
வாழ்வில் நான் வணங்கும்
ஆலயங்களில் ஒன்று.

வீணையும் கையுமாக வாசலில்
வரவேற்கும் சரஸ்வதி சிலை.
காற்று சிலு சிலுக்கும் சூழல்.
கனிவு மிகு உணர்வொன்றில்
இனிமையை உணர்வோம்.

எப்படி மறப்பேன்.
எப்படி மறப்பேன்.

நூலகம் என் ஆசான்.
நூலகம் என் நண்பன்.
நூலகத்தில் படித்த நூல்கள்.
நினைவில் நிலைத்து நிற்கின்றன.

பெளதிகத்தின் வரலாறு.
பறவைகளின் வரலாறு.
நீங்களும் விஞ்ஞானிகள் ஆகலாம்.
வாசித்து
நாங்களும் விஞ்ஞானிகள் ஆவோம்.

அறிவியல் நூல்கள் பற்பல.
அறிவியல் நூல்கள் பற்பல.

அனைத்தையும் வெளியிட்டது
அன்று சென்னயின் பதிப்பகம்
ஒன்று.

கல்கியின் பொன்னியின் செல்வன்,
கள்வனின் காதலி, அலையோசை
சிவராம் காரந்தின் மண்ணும் மனிதரும்,
சாண்டில்யனின் கடல் புறா
சிந்திக்க வைக்கும் போரும் அமைதியும்
டால்ஸ்டாயின் போரும் அமைதியும்
வாண்டுகள் எம்மை மகிழ்வித்த
வாண்டுமாமாவின் சிறுவர் நூல்கள்

பல நூல்கள். இப்படிப்
பல நூல்கள்.

எப்படி நான் மறப்பேன்.
எப்படி நான் மறப்பேன்.

அருகில் முற்றவெளி.
அதனருகில் பண்ணைக் கோட்டை.
சிறிது தொலைவில்
சுப்பிரமணியம் பூங்கா.
திறந்த வெளி அரங்கு.
தந்தை செல்வா நினைவுத் தூபி.

நடுவில் அமைந்திருக்கும் நூலகம்.
நான் வணங்கும் நூலகம்.

நூலகம் எரிந்த நாட்கள்.
நான் நிலை குலைந்த நாட்கள்.

இழப்புகள் ஈடு செய்ய முடியாதவை.
வரலாற்று ஆவணங்கள்.
வரலாற்றுச் சுவடிகள்.

நூலகத்தை நினைக்கையில்
நெஞ்சில் பற்பல உணர்வுகள்.

என்றும் என் ஆசான் நீ.
என்றும் என் நண்பன் நீ.

உன்னுடன் கழித்த நாட்கள்.
உன்னுடன் வளர்ந்த நாட்கள்.

நூலகமே உனக்கு என் நன்றி.
நூலகமே உனக்கு என் நன்றி.

### 3. ஆழ் மனக்குதிரையை அடக்கு நண்பா..

நான் எண்ணங்களை நம்புபவன்.நண்பா.
நான் எண்ணங்களின் வலிமையினை நம்புபவன்.

தறி கெட்டலையும் ஆழ்மனக் குதிரை.
தறி கெட்டலையும் குதிரையை
அடக்க நீ கற்றுக்கொள் நண்பா.
அடக்க நீ கற்றுக்கொள் நண்பா.

நான் எண்ணங்களை நம்புபவன்.நண்பா.
நான் எண்ணங்களின் வலிமையினை நம்புபவன்.

ஆழ் மனக்குதிரையை அடக்க முயன்றால்
அது அடங்க மறுக்கும்,. முரண்டு பிடிக்கும்.
எது நீ செய்து அடக்க நினைத்தாலும்
அது எதிர்த்து நிற்கும். முரண்டு பிடிக்கும்.

நான் எண்ணங்களை நம்புபவன்.
நான் எண்ணங்களின் வலிமையினை நம்புபவன்.

ஆழ் மனக்குதிரையை அடக்குவாய் நண்பா.
அதன் மேல் ஏறி சவாரி செய் நண்பா.
அதன் பின் உன் வாழ்வில் வெற்றிமழைதான்.
ஆம். வெற்றி மழையே. வாகை சூடுவாய் நண்பா.

நான் எண்ணங்களை நம்புபவன்.நண்பா.
நான் எண்ணங்களின் வலிமையினை நம்புபவன்.

முரண்டு பிடிக்கும் மனக்குதிரையை அடக்குவது
எப்படி என்றா கேட்கின்றாய் நண்பா.
எப்படி என்று எடுத்துக் கூறுவேன் நண்பா.
எப்படி என்று எடுத்துக் கூறுவேன் நண்பா.

நான் எண்ணங்களை நம்புபவன்..
நான் எண்ணங்களின் வலிமையினை நம்புபவன்.

மீண்டும் மீண்டும் ஒன்றைக் கூறினால்
மறுபடியும் மறுபடியும் அதை எடுத்துரைத்தால்
அது ஆழ் மனத்தில்  நிலையாகப்  படியும்.
அது ஆழ் மனத்தில் சென்று படியும்.

அமைதியான காலை நேரம் அல்லது
அந்தியின் பேரழகில் மெய்ம்மறந்து கிடக்கும் நேரம்

அல்லது படுக்கையில் கண் அயரும் தருணம்
அப்படி மீண்டும் மீண்டும் எடுத்துரை நண்பா.

அப்படி எடுத்துரைத்தால் உன் எண்ணம்
ஆழ்மனத்தில் சென்று படியும் நண்பா.
ஆழ்மனக்குதிரையை அடக்கும். வெல்லும்.
ஆழ்மனக்குதிரையை அடக்கும்., வெல்லும்.

நான் எண்ணங்களை நம்புபவன்.நண்பா.
நான் எண்ணங்களின் வலிமையினை நம்புபவன்.

ஆழ் மனக்குதிரையை அடக்குவாய் நண்பா.
அதன் மேல் ஏறி சவாரி செய் நண்பா.
அதன் பின் உன் வாழ்வில் வெற்றிமழைதான்.
ஆம். வெற்றி மழையே. வாகை சூடுவாய் நண்பா.

ஆழ் மனக்குதிரையை அடக்கு நண்பா.
ஆழ் மனக்குதிரையை அடக்கு நண்பா.
அதுவே வெற்றியின் திறவுகோல் நண்பா.
அதுவே வெற்றியின் திறவுகோல் நண்பா.

நான் எண்ணங்களை நம்புபவன்.
நான் எண்ணங்களின் வலிமையினை நம்புபவன்.

**4.** சுயமரியாதை இழக்காதே

காலப்பெருங்கடலில் சிறு துளி
ஞாலத்தில் நம் இருப்பு.

சுயமரியாதை இழக்காதே  ஒருபோதும் தோழா.
சுயமரியாதை இழக்காதே ஒருபோதும்  தோழா!
சுய மரியாதை இழக்காதே. ஒரு போதும்
சுய மரியாதை இழக்காதே. ஒரு போதும்
தோழா. ஒரு போதும்.

உனது நோக்கில் தெளிவிருந்தால்
உனது நோக்கில் உண்மையிருந்தால்
ஊர் கூடி எதிர்த்தாலும்
உருக்குலைந்து போகாதே.
உறுதியுடன் எதிர்த்து நில். தோழா!
எதிர்த்து நில்.
எதிர்த்து நின்றால் உன்
எதிர்காலம் ஒளிமயமாகும்.
ஆம். தோழா!

**5.** எதிர்காலம் ஒளிமயமாகும்.

அற்ப விருப்புகளுக்காக
ஆடுவர் சக மனிதர்.
அடி வருடிப் பிழைப்பவர் அவர்.
சொல்லொன்று
செயலொன்று
என வாழும் அவரை
எள்ளி நகையாடு தோழா!
எள்ளி நகையாடு தோழா!

இழப்பதற்கென்று இங்கு எதுவுமில்லை,
தோழா. எதுவுமேயில்லை.
இருக்கும் வரைதான் எல்லாம்.
இல்லாவிட்டால் எதுவுமேயில்லை.
உலகில் நிலைத்து நிற்பவை
உன் எண்ணங்கள் மட்டுமே தோழா.
உன் உடமைகள் அல்ல. தோழா.
உடல் அழியும்.
உடமைகள் அழியும்,
வரலாற்றில் வெகு தூரம் கூட
வரும் உன் சிந்தனைகள் மட்டுமே தோழா.

இளங்கோவின் அறச்சீற்றம்
காவியமானது தோழா.
காலத்தில் நிலைத்து
இன்னும் இருக்கிறது தோழா.
இன்னும் இருக்கிறது தோழா.

வள்ளுவர்தன் அறிவுரைகள் தோழா
இன்னும்]
வாழ்வுக்கு வழி காட்டுகின்றன தோழா.
வழி காட்டுகின்றன.

பாரதி இன்றில்லை தோழா.
பாடலை, அவன் கவிதையைப்
பாடிக்கொண்டு தானிருக்கின்றோம் தோழா.

உனது நோக்கில் தெளிவிருந்தால்
உனது நோக்கில் உண்மையிருந்தால்
ஊர் கூடி எதிர்த்தாலும்
உருக்குலைந்து போகாதே.
உறுதியுடன் எதிர்த்து நில். தோழா!
எதிர்த்து நில்.
எதிர்த்து நின்றால் உன்
எதிர்காலம் ஒளிமயமாகும்.
ஆம். தோழா!
எதிர்காலம் ஒளிமயமாகும்.

**6.** நான் இயற்கையின் குழந்தை**.**

நான் இயற்கையின் குழந்தை.
நான் இயற்கையின் குழந்தை.

இயற்கையை எப்போதும் இரசிப்பவள்
நான்.

இரவுவானை, அதில் கொட்டிக் கிடக்கும் நட்சத்திரங்களை
எத்தனை முறை இரசித்தாலும் உள்ளம் அடங்குவதில்லை.
இரவு முழுவதும் இரசித்துக் கொண்டிருக்கவும் முடியும்.
விடியும் வரை இரசித்துக் கொண்டிருந்ததும் உண்டு.

நான் இயற்கையின் குழந்தை.
நான் இயற்கையின் குழந்தை

விரிந்து கிடக்கும் விண் பிரமிப்பு ஊட்டும்.
வான் உண்மையில் விரிந்து செல்லும் என்பது
என் நெஞ்சைக் கிளர வைக்கும் உண்மை.
எப்பொழுதும் வியக்க வைக்கும் உண்மை.

நான் இயற்கையின் குழந்தை.
நான் இயற்கையின் குழந்தை

புள்ளி ஒன்றில் இருந்து விரிந்த பிரபஞ்சமா?
புள்ளி ஒன்றில் இருந்து விரிந்த பிரபஞ்சமா?
பிரமிப்பால் என் உள்ளம் நிறைந்து விடும்.
பிரமிப்பால் என் உள்ளம் நிறைந்து விடும்.

நான் இயற்கையின் குழந்தை.
நான் இயற்கையின் குழந்தை

எத்தனை மரங்கள். எத்தனை எத்தனை உயிர்கள்.
அத்தனையும் என் நெஞ்சைப் பிரமிக்க வைக்கும்.
இத்தனையையும் இங்கு உருவாக்கி வைத்தது யார்?
எத்தனை முறை கேட்டும் பதில்கள் இல்லை.

நான் இயற்கையின் குழந்தை.
நான் இயற்கையின் குழந்தை

**7. கல்லுண்டாய்ப் பயணங்கள்!**

கல்லுண்டாய் வீதியில்
காலையும் மாலையும்
பயணிப்பேன்.சைக்கிளில்
களிப்பூட்டும் பயணங்கள்
என்
கல்லுண்டாய்ப் பயணங்கள்.

காற்று வீசும்.
கீழ் வானின் கதிர் உதிக்கும்.
குருவிகள் காலையை வரவேற்கும்,
வாழ்த்துப்பா இசைக்கும் பொழுது

நான் பயணத்தைத் தொடங்குவேன்.
நகர் நோக்கிய பயணம்
யாழ்ப்பாண
நகர் நோக்கிய பயணம்.

அராலி வடக்கிலிருந்து
அடிடேன் பயணத்தைத் தொடங்குவேன்.
வழுக்கியாறு
வந்து கடலுடன் கலக்கும்
அராலிப் பாலத்தைக் கடப்பேன்.
அங்கு கடற் தொழிலாளர்
பணி செய்து கொண்டிருப்பர்.

பயணம் தொடரும்.
மேற்கில்
கல்லுண்டாய் உப்பளம்.
கிழக்கில்
கல்லுண்டாய் வைரவர்
கோவில்.

வெளியை ஊடறுத்து
விரைவேன்.

கருக்கிருளில் தெரியும்
காக்கைதீவுக் கடலில்
இரவு முழுவதும்
மீன்பிடித்த
கடற் தொழிலாளர்
பிடித்த மீன்களுடன்.
படகுகளில் வந்து கொண்டிருப்பர்.

விரிந்திருக்கும் வயல் வெளிகள்
விரிந்திருக்கும் நவாலி நோக்கி
பசுமையில் மூழ்கிக் கிடக்கும்
பசிய நெல் வயல்கள்.

வரலாற்றை எடுத்தியம்பும்
நவாலி மண் கும்பிகள்
தவமியற்றும் முனிவர்கள்

நகர் நோக்கி, யாழ்ப்பாண
நகர் நோக்கிக் கூலித் தொழிலாளர்
பயணித்துக்கொண்டிருப்பர். கூடவே
பயணித்துக் கொண்டிருப்பேன்
நான்.

அப்போது நான் மாணவன்.
யாழ் இந்து மாணவன்.
அதிகாலைகளில்
ஆச்சி வீடு செல்வேன்.
அங்கிருந்து பள்ளி செல்வேன்.

பயணம் மீண்டும் தொடங்கும்
பகலவன் அந்தியில் சாய்கையில்.
பகலவன் அந்தியில் சாய்கையில்.
பகலவன் அந்தியில் சாய்கையில்.
ஆம்.
அந்தியில் மீண்டும்
அராலி நோக்கிய என் பயணம்
ஆரம்பமாகும்.

ஆச்சி எண்ணெய் வாங்கிய
அன்பு மிகு எண்ணெய்க்கார ஐயா!

காக்கைதீவுக் கடலை ஒட்டிய
வெளியில்
மேய்வதற்காக கால் நடைகளைக்
மெதுவாகக் கூட்டி வருவார்
எண்ணெய்க்கார ஐயா.

கடலட்டையை சூளைகளில் அவிப்பர்
கடற் தொழிலாளர்

விரிந்திருக்கும் கல்லுண்யாய்

வெளியில் விரைந்து செல்கையில்
வானில் புள்ளினங்கள் சிறகசைக்கும்.
வானில் வண்ணக்கதிர்கள் கோலமிடும்.
இன்னும் சிறிது நேரத்தில்
இருள் சூழ்ந்து விடுமென்று எண்ணி
வேகத்தை அதிகரிப்பேன்.
விரைவாக வீடு செல்லுவேன்.

எண்ணங்கள் களிப்பில் தோய்ந்திருக்கும்
என் கல்லுண்டாய்ப் பயணங்கள்
எப்பொழுதும் எனக்கு உவப்பானவைதாம்.
ஆம்.
எப்பொழுதும் எனக்கு உவப்பானவைதாம்.

**8. நகரைச் சுத்தமாக்குவோம்.**

நகரைச் சுத்தமாக்குவோம். வாழும்
நகரைச் சுத்தமாக்குவோம்.

குப்பை கூளங்கள் போடாதீர்.
கிருமிகள்  பெருகிடச் செய்யாதீர்.
எப்பொழுதும் சுத்தமாக நகர்தனை
வைத்திருப்போம். நாம் வைத்திருப்போம்.

சூழலைப் பாதுகாப்போம். நாம்
சூழலைப் பாதுகாப்போம்.
சூழற் பாதுகாப்பு வாழ்வைச்
சீரமைக்கும், நலமாக்கும்.

நகரைச் சுத்தமாக்குவோம். வாழும்
நகரைச் சுத்தமாக்குவோம்.

வாரத்தில் ஒரு நாள் இணைவோம்.
வாரி அள்ளுவோம் குப்பை கூளங்களை.
சிரம தானம் செய்வோம். நாம்
சிரம் தானம் செய்வோம்.

நகரைச் சுத்தமாக்குவோம். வாழும்
நகரைச் சுத்தமாக்குவோம்.
சுத்தமாக்க இணைவீர்.
சுத்தமாக்க இணைவீர்.

**9.** அறிந்தால் அறிவியடா என் பெரு வரையே**!**

கண்ணா!
அலைக்கூம்புக்குள்
விரிந்திருக்கின்றதடா நம்காலவெளி.
ஆம்!

கூம்புக்காலவெளியில் நாம்
கும்மாளமடிக்கின்றோமடா.

கூம்புக்கும் வெளியேயொரு யதார்த்தம்.
நாமறியாக் காலவெளி அது கண்ணா

கண்ணா! நீ இவைபற்றி என்றாவது
கருத்தில் கொண்டதுண்டா? கூறடா!

இருப்புப்பற்றி இங்கு நினைப்பதிலுள்ள
இன்பம் வேறொன்றுண்டோ கண்ணா

காலவெளியடா கண்ணா! நீ என்
காலவெளியடா கண்ணா!

எல்லைகடந்து சிறகடிக்க எப்போதும்
விரும்புதடா என் மனம் கண்ணா!

உன் மனமும் அப்படியா கண்ணா!

காலவெளி கடந்து சிறகடிக்க முடியுமெனின்
கண்ணா
அக்கனவுலகம் காணத்துடிக்குதென்
மனமே. கண்ணா என் மனமே!

ஒரு வினா! விடைபகிர் கண்ணா!

நீ அலையா கண்ணா!

நீ துகளா கண்ணா!

நீ அலையென்றால் காலவெளியும் அலையன்றோ!

நீ துகளென்றால் காலவெளியும் துகளன்றோ!

அலையா? துகளா ? கண்ணா
அறிந்தால் அறிவியடா என் பெரு வரையே.

**10.** அறிந்தால் அறிவியடி அருவியே!

இக்கவிதை பதிவுகள்.காம் வெளியீடாக வெளிவந்த எனது 'ஒரு நகரத்து மனிதனின் புலம்பல்' கவிதைத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதையான 'அறிந்தால் அறிவியடி அருவியே!' என்னும் கண்ணம்மாக் கவிதை. யு டியூப்பில் கேட்க -

கண்ணம்மா! அலைக்கூம்புக்குள்
விரிந்திருக்கின்றதடி நம்காலவெளி.
ஆம்!

கூம்புக்காலவெளியில் நாம்
கும்மாளமடிக்கின்றோமடி.

கூம்புக்கும் வெளியேயொரு யதார்த்தம்.
நாமறியாக் காலவெளி அது கண்ணம்மா!

கண்ணம்மா! நீ இவைபற்றி என்றாவது
கருத்தில் கொண்டதுண்டா? கூறடி!

இருப்புப்பற்றி இங்கு நினைப்பதிலுண்ட
இன்பம் வேறொன்றுண்டோ கண்ணம்மா.

காலவெளியடி கண்ணம்மா! நீ என்
காலவெளியடி கண்ணம்மா!

எல்லைகடந்து சிறகடிக்க எப்போதும்
விரும்புதடியென் மனம் கண்ணம்மா!

உன் மனமும் அப்படியாயடி!

காலவெளி கடந்து சிறகடிக்க முடியுமெனின்
கண்ணம்மா அக்கனவுலகம் காணத்துடிக்குதென்
மனமே. கண்ணம்மா என் மனமே!

ஒரு வினா! விடைபகிர் கண்ணம்மா!

நீ அலையா கண்ணம்மா!

நீ துகளா கண்ணம்மா!

நீ அலையென்றால் காலவெளியும் அலையன்றோ!

நீ துகளென்றால் காலவெளியும் துகளன்றோ!

அலையா? துகளா ? கண்ணம்மா!
அறிந்தால் அறிவியடி அருவியே!

**11.** முகமூடிகள் உலகில்

முகமூடிகள்  வாழும் பூமியிது.
முகமூடிகள்  வாழும் பூமியிது.

முகமூடிகளின் உலகில்
மரணித்து விட்டது உண்மைவ்
வன்மம் உள் வைத்து
நன்மொழி பகர்வார் வெளியில்.

முட்டாள்களும்  முகமூடிகளில்
பேரறிஞர்களே.

முகமூடிகளை நண்பரென்று
மனத்தில்
எண்ணியதுமுண்டு.
ஏமாந்து கிடந்ததும் உண்டு.

வன்மம் நிறைந்திருக்கும் முகமூடிகள் உலகில்
நன்மைதான் ஏது?

இருக்கும் துளி இருப்பில் முகமூடிகளே
இனியும் என்னால் பொன் நேரத்தை
இழக்க முடியாது.

முகமூடிகளே .ஓடி ஒளியுங்கள்.
அல்லது
முகமூடிகளை அகற்றி விட்டு
அவதாரம் எடுங்கள். புது
அவதாரம் எடுங்கள்.

மாறுவதில் சிரமம் என்றால்
முகமூடிகளே.ஓடி மறையுங்கள்.
முகமூடிகளே.ஓடி மறையுங்கள்.

முகமூடிகள் அற்ற உலகில்
அகம் மகிழ்ந்து இருக்கவே
நான் எப்போதும் விரும்புகின்றேன்.
ஏன் என்றால் அழுத்தங்கள்
எவையுமற்ற இருப்பை அவை
எனக்குத் தருகின்றன, அதனால்.

இருக்கும் சிற்றிருப்போ இங்கு
சிறியது. மிகவும் சிறியது.

இதற்குள் எனக்கு நிறையவே
இருக்கின்றன பணிகள் செய்வதற்கு.
அதனால்
உங்களுடன் கூடிக் குலாவிட
இங்கெனக்கு நேரம் இல்லை.

முகமூடிகளே. ஓடி விடுங்கள்.
முகமூடிகளே. ஓடி விடுங்கள்.

**12.** அறிவுரை கூறு கண்ணா!

காதல் வயப்பட பெண் ஒருத்தியின் உணர்வுகளை விபரிக்கும் கவிதை இது.

உன்னை மறப்பதற்கு முடியவில்லை.
என்னால் முடியவில்லை கண்ணா
என்னால் முடியவில்லை.

எத்தனை தடவை முயற்சி செய்தேன்.
அத்தனையும் விழலுக்கு இறைத்த நீரே.
கண்ணா,
விழலுக்கு இறைத்த நீரே.
என்னால் முடியவில்லை கண்ணா
என்னால் முடியவில்லை.

அன்று உன்னை என் பார்வைத் துண்டில்
அகப்படுத்தி வைத்தேன்.
அது இன்னும் பத்திரமாக இருக்கிறது.
கண்ணா,
இருக்கிறது.

உன் புன்னகை பார்த்துப் பரவசம் கொண்டேன்.
கண்ணா,
இன்னும் இருக்கிறது இதயத்தில்
அன்று கண்ட அந்த முகம்.
கண்ணா
அன்று கண்ட அந்த முகம்.

முகம் பார்த்து என் மோகம் தணிப்பேன்.
கண்ணா என்
மோகம் தணிப்பேன்.
என்றுனைப் பார்ப்பேன். கண்ணா,
என்றுனைப்பார்ப்பேன்.

இன்று உனை இப்போதே பார்ப்பின்
இன்பம் அதைவிட வேறு உண்டோ
கண்ணா,
இன்பம் அதைவிட வேறு உண்டோ?

காதல் என்றால் என்னவென்று கண்ணா
கண்டு கொண்டேன் உன் மூலம் கண்ணா.
காதலற்ற வாழ்வில் இனிமை இல்லை.
கண்ணா, உணர வைத்தாய் எனக்கு.
கண்ணா, உணர வைத்தாய் எனக்கு.

என்றுனைக் காண்பேன் கண்ணா.
என்று உன்னுடன் உரைப்பேன் கண்ணா.
அன்று வரை நானெப்படி இருப்பேன் கண்ணா.
நன்று இதற்கோர் அறிவுரை கூறின் கண்ணா.
இன்றே இப்போதே கூறு கண்ணா.
கூறு கண்ணா.

**13.** கார்ல் மார்க்ஸ்

சரித்திர வளர்ச்சியிலே
சமுதாய விதிகளைச்
சரியாக உய்த்துணர்ந்தவன்
மார்க்ஸ். கார்ல் மார்க்ஸ்.

ஏழ்மை இவன் தன்
எண்ணங்களை என்றுமே
சிதைத்திட இவன்
சிறிதும் இடம் கொடுத்ததில்லை.

முயற்சி ஊக்கத்தை
மூலதனம் ஆக்கினான்.
மூலதனம் படைத்தான்.
மூலதனம் படைத்தான்.

நேற்றைய மாற்றங்களை
எதிர்வு கூறியவன்.
இன்றைய மாற்றங்களை
இட்டு எச்சரிக்கை செய்தவன்.

உண்மைகளை நம்
மண்ணுலகின் நீண்ட பாதையிலே
மக்கள் மீண்டுமொரு தடவை
அறிந்து கொள்வர்.

சரித்திர வளர்ச்சியிலே
சமுதாய விதிகளைச்
சரியாக உய்த்துணர்ந்தவன்
மார்க்ஸ். கார்ல் மார்க்ஸ்.

**14.** பகுத்தறியும் பண்பு வேண்டும் நண்பா**.**

பகுத்தறியும் பண்பு வேண்டும் நண்பா.
பாரில் பகுத்தறியும் பண்பு வேண்டும்.

எதை நீ கேட்டாலும்
எதை நீ வாசித்தாலும்
அதை நீ அப்படியே
நம்பி விடாதே நண்பா.
நம்பி விடாதே நண்பா.

பகுத்தறிந்து பார் முதலில்.
பின்பு முடிவு செய் நண்பா.
பகுத்தறிவு சரி பிழை காட்டும்.
பகுத்தறிவு உண்மை பொய் காட்டும்.
பகுத்தறிவு ஏற்றம் தரும். இங்கு
பகுத்தறிவு மாற்றம் தரும்.

பகுத்தறியும் பண்பு வேண்டும் நண்பா.
பாரில் பகுத்தறியும் பண்பு வேண்டும்.

மனிதருக்கு மேன்மை பகுத்தறிவால் நண்பா..
புனிதர் அவர் ஆவதும் பகுத்தறிவால் நண்பா.
இனி நீ வாழ்வை மாற்றி விடு.
எனின் பகுத்தறிவு உனை ஏற்றி வைக்கும்.

பகுத்தறியும் பண்பு வேண்டும் நண்பா.
பாரில் பகுத்தறியும் பண்பு வேண்டும்.
பகுத்தறியும் பண்பை வளர்த்து விடு.
பகுத்தறியும் பண்பை வளர்த்து விடு.

கேள்வி கேட்பது பகுத்தறிவின் தன்மை.
கேள்வியற்ற வாழ்வு தாழ்வின் தன்மை.
நண்பா.
பகுத்தறியும் பண்பு வேண்டும் நண்பா.
பாரில் பகுத்தறியும் பண்பு வேண்டும்.

நினைத்தது நடக்க வேண்டும் என்றால்
அனைத்தையும் பகுத்து அறி நண்பா.
நம்பும் எதனையும் நம்பு பகுத்தறிந்தே.
நண்பா நம்பு பகுத்தறிந்தே.

பகுத்தறியும் பண்பு வேண்டும் நண்பா.
பாரில் பகுத்தறியும் பண்பு வேண்டும்.

**15.** சமநீதி பிறக்கட்டும் எங்கும்**.**

சமநீதி இல்லையேல் அநீதியே.
சமநீதி எங்கும் இருந்தால்
வர்க்கப் பிரிவுகள் மறையும்.
வர்ணப் பிரிவுகள் மறையும்.

ஆண், பெண் பிரிவுகள் ஒழியும்,
அனைத்துப் பிரிவுகளும் ஒழியும்,.
பிரிவுகள் நீங்க வேண்டுமானால்
பிறக்கட்டும் இங்கு சமநீதி.

சமநீதி பிறக்கட்டும் எங்கும்.
சமைத்திடுவோம் சமநீதி உலகை.
அமைத்திடுவோம் அன்புமிகு வாழ்வை.
அனைவரும் எழுக, உறுதி கொள்க.

உதிரத்தில் இல்லை வேறுபாடு.
உதிக்கட்டும் சமநீதி உலகம்.
உணர்ந்து செயற்படுவோம் நாம்.
உதிக்க வைப்போம் சமநீதி உலகை.

போர் சூழந்த உலகு எதனால்?
பாகுபாடு மிக்க உலகு அதனால்.
பாகுபாடு நீக்கி வைப்போம்.
போர்களை ஒழித்து வெல்வோம்.

சமநீதி பிறக்கட்டும் எங்கும்.
சமைத்திடுவோம் சமநீதி உலகை.
அமைத்திடுவோம் அன்புமிகு வாழ்வை.
அனைவரும் எழுக, உறுதி கொள்க.

**16.** ஓராயம் என்றோர் ஒளிர் திட்டம்!

[பெருந்தொற்றுக் காலத்தில் எழுபதுகளில் யாழ் இந்துக் கல்லூரியில் படித்த மாணவர்கள் சிலர் எண்ணங்களில் உதித்த திட்டம் ஓராயம் திட்டம் . அது பற்றிய மேலதிக விபரங்களுக்கு - https://oraayam.org ]

ஓராயம் போல் வருமா? இங்கு ]
ஓராயம் போல் வருமா?

ஊர்நலம் நாடி உருவான
ஓர் ஒளிர் திட்டம்
ஓராயம். திட்டம்,
ஓராயம் திட்டம் .

பெருந்தொற்றுக் காலத்தில்
உருப்பெற்ற ஒரு திட்டம்
ஓராயம் திட்டம். நல்
ஓராயம் திட்டம்.

யாழ்இந்து மாணவர்கள் இணைந்து
வாழ்நாட பயன் கருதி
உருவாக்கிய திட்டம் ஓராயம்.
எழுபதுகளில் படித்தவர்கள் சிலர்
எண்ணங்களில் உருவான திட்டம்.

இளையவர் தொழில்நுட்பக் கல்வி,
இணைய வழிக் கல்வி
சூழலைப் பேணும் விவசாயம்
சுகவாழ்வு முதியோர் சுகவாழ்வு
நீர்வளம் பேணல்,பாதுகாத்தல்
கழிவின் மீளப் பாவிப்பு என
ஊர்நலம் நாடி உருவான திட்டம்
உயர்ந்த நல்லதோர் திட்டம் ஓராயம்

ஓராயிரம் அமைப்புகள் இருப்பினும்
ஓராயம் போல் வருமா?
ஓராயம் போல் வருமா? இங்கு ]
ஓராயம் போல் வருமா?

பெருந்தொற்றுக் காலத்தில்
உருப்பெற்ற ஒரு திட்டம்
ஓராயம் திட்டம். நல்
ஓராயம் திட்டம்.

ஓராயம் திட்டம் மேலும்
ஒளிரட்டும், ஒளிரட்டும். ஒளிரட்டும்.
ஒளிமயமான ஓர் எதிர்காலம்
ஒளிர மிளிரட்டும் ஓராயம்.

**17. நாங்கள் கவிகள்!**

1980இல் தினகரன் (இலங்கை) பத்திரிகையின் கவிதைச் சோலை பகுதியில் வெளியான எனது கவிதைகளான 'சீடர்கள்' , ' எதிர்பார்ப்பு' ஆகிய இரு கவிதைகளையும் ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டது இக்கவிதை.. யு டியூப்பில் கேட்க - https://www.youtube.com/watch?v=2BoJqz8w87s

நாங்கள் கவிகள்
புல்லின் நுனிகளில் பொலிந்திடும் எழிலினில்
மெல்லிய முருங்கைகளில் தொங்கிடும்
தூக்கணாங் குருவிக் கூடுகளின்
இனிமையான அழகுகளில்
மெய்ம்மறந்திடும் எங்கள் நெஞ்சங்கள்;
சோகங்கள் கண்டு நகருகையில்
அமைதி அடைவதில்லை.
வாழ்க்கைக் காடுகளில் வழிமாறித் துடித்திடும்
மனித ஜீவன்களுக்கு
வழிகாட்டுதற்காய், கவி வடித்திடும் வழிகாட்டிகள்
நாங்களே!

அவலங்கள் கண்டு சிந்தைகள் கனன்று
துடிக்கையிலே
புயலாகச் சீறியெழும் நாங்கள் மிகவும்
அமைதியானவர்கள்
இயற்கையாசானின் இரகசியங்களை அறிந்திட்ட
சீடர்களே நாம்.

எம் நெஞ்சத்துலைகளில் கொதித்திடும்
சிந்தனை அணுக்கருக்கள்
ஒரு நாள் ஒன்று திரண்டு
ஆக்க அணுகுண்டுகளாக வெடித்தெழும்

அவ்வேளை - சீறியெழும்
செயற் கதிர் வீச்சுகள்
முன்னால் சமுதாயத்தின்
பொய்மைக்கரங்கள்
பொசுங்கிக் கருகும்
எழும் அனற்காற்றில்
ஏற்றத்தாழ்வரக்கர்
நிலைகுலைந்து போவர்
தோன்றிடும் ஆற்றலில்
எழுந்து நிற்கும் ஏற்றமொன்றில்
இவ்வுலகம் பொங்கிச் சிரிக்கும்.

நாங்கள் கவிகள்
புல்லின் நுனிகளில் பொலிந்திடும் எழிலினில்
மெல்லிய முருங்கைகளில் தொங்கிடும்
தூக்கணாங் குருவிக் கூடுகளின்
இனிமையான அழகுகளில்
மெய்ம்மறந்திடும் எங்கள் நெஞ்சங்கள்;
சோகங்கள் கண்டு நகருகையில்
அமைதி அடைவதில்லை.
வாழ்க்கைக் காடுகளில் வழிமாறித் துடித்திடும்
மனித ஜீவன்களுக்கு
வழிகாட்டுதற்காய், கவி வடித்திடும் வழிகாட்டிகள்
நாங்களே!

**18.** காலவெளிக்காட்டி வல்லுனன்!

பதிவுகள்.காம் வெளியீடான 'ஒரு நகரத்து மனிதனின் புலம்பல்' கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள இக்கவிதை. ஒரு சில மாற்றங்களுடன் பாடலாக்கப்பட்டுள்ளது. யு டியூப்பில் கேட்க்

காலவெளிச் சட்டங்களைக் கோத்து உருவானது
இந்த இருப்பு கண்ணம்மா!

இவ்விருப்பும் ஒரு காலவெளிப் படம்
என்பதையுணர்வாயாயடி நீ கண்ணம்மா.

என்னாசை ஒன்று உள்ளதென்பேன்.
என்னவென்று நீ அறியின் நகைக்கக்கூடும்.
கண்ணம்மா, நகைக்கக் கூடும்

அப்போது கண்ணம்மா! அதிகாலைநேரம்.
ஆடியசைந்து நீ வந்தாய் பொழுதின் எழிலென.
அது நினைவிருக்கிறதா? உனக்கு.
அது நினைவிருக்கிறது எனக்கு கண்ணம்மா..

மார்புற நூல்தாங்கி, முகம் தாழ்த்தி
நிலம்பார்த்து நடந்து வந்தாய்.
அது உன் பாணி கண்ணம்மா.
எதிரில் காட்சிகள் தெரிவதெப்படி உனக்கு
என்று வியந்து நிற்பேன் கண்ணம்மா.

இருபுறம் பிரிகுழல் இடைவரை
இருந்தசையும். ,
பொட்டிட்ட வதனத்தில் நகையேந்தி நீ வருவாய்.
பொழுது சிறக்கும் நடந்து வரும் உன் எழிலில்
கண்ணம்மா,

வழக்கம்போல் அசைந்து சென்ற பொழுதொன்றில்
அதிகாலைப்பொழுதொன்றில்.
சந்தி சென்று திரும்புகையில்
ஓரப்பார்வைக்கணை தொடுத்தாய் கண்ணம்மா.
அக்கணத்தைச் சிறைப்படுத்தி
ஆழ்மனத்தினாழத்தே
பத்திரப்படுத்தி வைத்துள்ளேன்
கண்ணம்மா.
அதற்கு எப்போதுமில்லையடி
விடுதலை. ஆயுள் தண்டனைதான்.

திரையிலோடிவிட்ட காட்சிகளை மீண்டும்
'ஓடவிட்டு, ஓடிவிட்ட காட்சிகளில் ஒன்றிக்
கிடப்பதில்லையா கண்ணம்மா!
காலவெளிக் காட்சிகளை அது ஓடவிட்டாலென்ன?
ஆம்! மீண்டும் ஓடவிட்டாலென்ன?
என்று நாம் சிந்திப்பதுண்டு கண்ணம்மா! இல்லையா.

குவாண்டத்திரையில் இருப்புக்குப்
பல நிலைகள் ஒரு
கணத்தில் கண்ணம்மா.
காலவெளித்திரையில்
காலவெளிச்சட்டங்களை இருந்த
காலம் நோக்கி ஓட்டிடும் ஆற்றல்
கை வரப்பெற்றவன் இவன் என்பதை அறியின்
அதிசயித்துப் போவாயடி கண்ணம்மா,

காலவெளித்திரையில்
காலவெளிக்காட்டி இயந்திரத்தை
கையாள்வதில் வல்லவன் இவன் கண்ணம்மா.
காலவெளிக்காட்டி வல்லுனன் இவன் கண்ணம்மா.

**19. கவிதை: இந்த மனிதர்! இந்த உலகம்! இந்தப் பிரபஞ்சம்!**

- இக்கவிதை 5/3/1983 அன்று என் குறிப்பேட்டில் எழுதப்பட்ட கவிதை. -

ஆ...இந்த மெல்லிய இளந்தென்றல்...
இடையில் கலந்து வருமெழில் மலர்களின்
சுகந்த நறுமணம்...
பசுமை மண்டிக் கிடக்கும் வயல்வெளிகளில்
பாடிப் பறந்திடும் வானம்பாடிகளின்
இன்ப கானங்கள்...
ஆகா! ஆகா! ஆகா!
எத்துணை இனிமையானவை!
எத்துணை இன்பமானவை!

பதுங்கிக் காடுகளில் புகுந்துவரும்
நதிப்பெண்களே!
நான் உங்களை எவ்வளவு காதலிக்கிறேன்
தெரியுமா? இளமை கொஞ்சுமெமுங்களெழிற்
துள்ளல் நடைகண்டு மோகத்தீயாலெந்தன்
நெஞ்சம் வேகுகின்றதே! புரியவில்லையா
பெண்களே!

மெல்லிய கருக்கிருளில் ஆழ்ந்து கிடக்கும்
அதிகாலைப் பொழுதுகளில்,
தூரத்தே ஒதுங்கி நின்று கண்சிமிட்டும்
நட்சத்திரத் தோகையரே!
உங்களைத்தான் தோகையரே!
நீங்கள்தான் எத்துணை அழகானவர்கள்!
எத்துணை அழகானவர்கள்!
நான் உங்களையெல்லாம் எவ்வளவு
நேசிக்கின்றேன் தெரியுமா? என்னினிய
தோழர்களே!

இந்த மண்ணினை, இந்தக் காற்றினை,
இந்த வெளியினை, அடிவானினை,
இந்த எழில் மலர்களை, மரங்களை,
இந்தச் சூரியனை, இதன் ஒளியினை,
இவற்றையெல்லாம் நான்
மனப்பூர்வமாக நேசிக்கின்றேன்.

இதோ இங்கே வாழும் இந்த மானுடர்களை,
ஆபிரிக்கக் கறுப்பினத்தவர்களென்றாலென்ன
அமெரிக்க வெள்ளையரென்றாலென்ன,
அரபு முஸல்மானென்றாலென்ன,

ஆசிய தேசத்தவரென்றாலென்ன,
இவர்களையெல்லாம்,
இந்த மானுடர்களையெல்லாம்
நான் நேசிக்கின்றேன்.
நான் நேசிக்கின்றேன்.

விரிந்த, பரந்த இப்பிரபஞ்சத்துக்
கோள்களை, கதிர்களை, பால் வீதிகளை,
ஆங்கு வாழும் தகைமைபெற்ற
உயிர்களையெல்லாம்
நான் நேசிக்கின்றேன்.
நான் நேசிக்கின்றேன்.
நான் நேசிக்கின்றேன்.

இந்த உயிர்களிற்காகவே
இந்தப் பிரபஞ்சத்துப் புதிர்களை
விடுவிப்பதற்காகவே
என் நெஞ்சில் பொங்குமுணர்வுகளை
எழுத்தாக வடிக்கின்றேன்.
ஆமாம்! ஆமாம்! ஆமாம்!
ஆமாம்! ஆமாம்! ஆமாம்1

**20.** அறிஞர் அண்ணா!

என் ஆளுமையில் அறிஞர் அண்ணாவுக்கும் முக்கிய பங்குண்டு. வெகுசனப் படைப்புகள் -> திராவிட முன்னேற்றக் கழக எழுத்துகள் -> மார்க்சியப் புரிதல் என என் ஆளுமை பரிணாமடைந்து வந்துள்ளது. பதின்ம வயதுகளில் அறிஞர் அண்ணாவின் எழுத்துகள் உரைகள் இளைஞர்களை ஆட்டிப் படைத்தன. தேடித் தேடி வாசித்தோம். இளைஞர்கள் நூலகங்களை அண்ணா அறிவகம் என்னும் பெயரில் ஆரம்பித்தார்கள்.

சமூகத்து மூட நம்பிக்கைகளை
சுட்டெரித்தவர் அறிஞர் அண்ணா.

'ஏ தாழ்ந்த தமிழகமே!
எம்மைப் பிரமிக்க வைத்தது.
எம்மைச் சிந்திக்க வைத்தது.
எங்கும் நிலவிக் கிடக்கும்
ஏற்றத் தாழ்வுகளை எடுத்துரைத்தது.

'எதையும் தாங்கும்  இதயம் வேண்டும்'

'நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்.
நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்.'

'ஒன்றே குலம். ஒருவனே தேவன்'

அண்ணாவின் மொழியை மாந்திக் கிடந்தோம்.
அதில் களிவெறி கொண்டு கிடந்தோம்.

சுயமரியாதை, சமநீதி, பகுத்தறிவு
உயர்வாய் இவற்றைக் கடைப்பிடித்தென
ஓங்காரம் இட்டவர் அறிஞர் அண்ணா.

சமூகத்து மூட நம்பிக்கைகளை
சுட்டெரித்தவர் அறிஞர் அண்ணா.

பன்மொழிப் புலமை
பாமர மக்களுடன்
பேசும் பாங்கு
அறிந்தவர் அண்ணா.

எழுத்துகளால் எம்மைக் கவர்ந்தார்.

ஆற்றிய உரைகளில் எம்மை
அகப்படுத்தியவர் அறிஞர் அண்ணா.

அவர் ஆற்றும் அடுக்குமொழி உரைகள்
எவர் ஆற்றுவார் இம்மாநிலத்தில்.

பகுத்தறிவுக் காவலன்
பெரியாரின் சீடன்.
உதயத்தில் அஸ்தமனம்
இதயத்துப் பேரிடி.

சமூகத்து மூட நம்பிக்கைகளை
சுட்டெரித்தவர் அறிஞர் அண்ணா.

**21.** எண்ணம் நிறைவேறும்

இது ஒரு காதல் பாடல். காதலர்கள் உரையாடுவது போன்று அமைந்த பாடல். ஆண், பெண் குரலை வேறு படுத்திக் காட்டுவதில் SUNO சிரமம் தருகின்றது. நண்பர்களே! ஆணும், பெண்ணும் இணைந்து பாடுகையில்; , குரல்களை வேறுபடுத்திப் பாடலை SUNO மூலம் இலகுவாக உருவாக்கும் வழிகள் உள்ளனவா? அநேகமான சமயங்களில் SUNO குரல்களை மாற்றி விடுகின்றது. யு டியூப்பில் கேட்க - https://www.youtube.com/watch?v=xJ4HZTrBaXA

ஆண்:

எங்கோ பிறந்தாய். அன்பே! எங்கோ வளர்ந்தாய்.
இங்கு வந்தாய். என் மனம் கவர்ந்தாய்.
நேற்று வரை உன்னை அறியேன் அன்பே.
இன்றோ என்னில் பாதி.

பெண்:

யார் கூட்டி வைத்தார் நம்மை
கூட்டி வைத்தவர் உறவைக்
குலைத்து வைத்ததும் ஏனோ?
கலைத்து வைத்ததும் ஏனோ?

ஆண்:

உண்மை உறவு கலைவதில்லை.
உண்மை உறவு குலைவதில்லை.
உண்மை என்னை நம்பு. கண்னே.
உண்மை என்னை நம்பு.

பெண்:

அன்பே.
அந்த நம்பிக்கையில் வாழ்கின்றேன்.
இந்தப் பிறப்பில் நீயே என் துணை.
எந்தப் பிறப்பிலும் நீயே துணையாகச்
சொந்தம் தொடரவே மனம் விரும்புகிறது.

ஆண்:

அன்பே.
பிரிவு நீங்கி உன்னைச் சேர்வேன்.
தெரிவை உன் எண்ணம் நிறைவேறும்.
என் எண்ணம் உண்மையாயின் அன்பே

உன்னை நான் நிச்சயம் சேர்வேன்.

பெண்:

அன்பே.
உன் சொற்கள்
என் நெஞ்சின் சூட்டைத் தணித்தன,.
என் எண்ணமும் அதுவே.
நல்லது நடக்கும் அன்பே.
நல்லதையே நினைப்போம்.
அல்லவை தூர ஓடட்டும் அன்பே.
நல்லவை நம்மை நாடி வரட்டும்.

ஆண்:

எங்கோ பிறந்தாய். அன்பே! எங்கோ வளர்ந்தாய்.
இங்கு வந்தாய். என் மனம் கவர்ந்தாய்.
நேற்று வரை உன்னை அறியேன் அன்பே.
இன்றோ என்னில் பாதி.

எம் எண்ணம் நிறைவேறும்.
நம் எண்ணம் நிறைவேறும்.
இனியவற்றை எண்ணுவோம். நாம்
இன்பத்துடன் இருப்போம்.

**22.**கனவில் வந்தாய்!

கனவில் வந்தாய் அன்பே என் அதிகாலைக்
கனவில் வந்தாய்

உன்னைக் காணாமல் உருகும் நெஞ்சுக்கு
உன் வருகையால் ஒத்தடம் தந்தாய்.
என்னை மறக்க வைத்தாய்
உன்னை நினைக்க வைத்தாய்.

கனவில் வந்தாய் அன்பே. என் அதிகாலைக்
கனவில் வந்தாய்

நிச்சயம் உன் ஆழ் நினைப்போ
அச்சமயம் கனவைத் தந்ததோ நானறியேன்.
உண்மை அன்பு நினைக்க வைக்கும்
நினைப்பவரை நினைக்க வைக்கும் என்பாய் நீ.

அதை நினைத்தேன் அப்போது. ஆம்.
அது உண்மையாக இருக்கக் கூடும்.
அதனால்தான் நீ அக்கனவில் வந்தாயோ.
அன்பே. நீ அக்கனவில் வந்தாயோ.

கனவில் வந்தாய் அன்பே. என் அதிகாலைக்
கனவில் வந்தாய்

கனவில் உன்னைக் கண்டது
நனவிலும் தொடர்கிறது அன்பே.
நினைவில் நிறைந்தாய் அன்பே
நீக்கமற என்பேன் அன்பே.

கனவில் வந்தாய் அன்பே. என் அதிகாலைக்
கனவில் வந்தாய்

மானுட வாழ்வில் அன்பே
மறக்க முடியாத அனுபவம் காதல்.
உறக்கமின்றித் தவிக்க வைக்கும்.
உள்ளவரை உளத்தை வாட்டி வைக்கும்.
கனவில் வந்தாய் அன்பே
காதல் உணர்வு தந்தாய்
நினைவில் நிறைந்தாய் அன்பே
நீக்கமற என்பேன் அன்பே

கனவில் வந்தாய் அன்பே. என் அதிகாலைக்

கனவில் வந்தாய்

**23.** குறிப்பேட்டுப் பதிவுகள் **- களத்தில் குதித்திடு!**

இக் கவிதையை என் குறிப்பேட்டில் 14-11-1982 அன்று எழுதினேன். அன்றிருந்த, அக்காலச் சூழலின் வெளிப்பாடாக வெளிப்பட்ட என் மனத்தின் வெளிப்பாடு. -

என்று உன்னால் உனது சொந்த மண்ணிலேயே
தலை நிமிர்ந்து நிற்க முடியாமல் ஆகின்றதோ,
என்று உன்னால் சுதந்திரமாக உன் கருத்துகளை
எடுத்துரைக்க முடியாமற் போகின்றதோ,
உனது சோதரர்களின் உயிர்களுக்கு
உத்தரவாதம் என்று இல்லாதொழிந்து போகின்றதோ,
என்று என் தோழனே! பெண்மை கொத்தி
எகிறிடப் படுகின்றதோ,
என்று உனது சுய கவுரவம் சிதைக்கப்பட்டு
எரிக்கப்பட்டு கசக்கப்படுகிறதோ,
என்று உனது தாயின் கண்ணீரிற்கு
உன்னால் பதிலுரை பகர முடியவில்லையோ,
என்று சுதந்திரமாக மூச்சு மூச்சுவிடுவதுகூட
மறுக்கப்பட்டு விடுகின்றதோ,
என்று உன் பிஞ்சுகளின் கொஞ்சல்களை இரசிக்கமுடியாது
உன்னால் ஆகிவிடுகின்றதோ,
என்று உன்னைச் சுற்றிலும் துப்பாக்கிகளின் புகையால்
அவலங்கள் பரவிடத் தொடங்கிடுதோ,
என்று உன்னைச் சுற்றிலும் அச்சம், அவலம், சோகம், சாவு
ஆகியன வலை பின்னத் தொடங்குகின்றனவோ,
என்று உன்னைச் சுற்றிலும் போராட்டமும், குமுறலும், விரக்தியுமே
வாழ்வென்றாகி விடுகின்றனவோ,
என்று உன்னைச் சுற்றிலும் , ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணியும்,
ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு கணத்தின்
ஒவ்வொரு துளியுமே..
வாழ்வே ஒரு கேள்வியாக, உயிர்ப் போர்முனையாக,
உருவாகி விடுகின்றதோ, அன்று , ஆமாம் அன்று,
நீ உனது போர்ப்பிரகடனத்தைத்
தொடங்கிவிடு!
சுதந்திரக் காற்றினைத் தரிசிப்பதற்கான
தர்மத்திற்கான உன் போர் முரசத்தினைக் கொட்டிடு.
கோழைத்தனத்தினைக் குதறி எறிந்துவிட்டுக்
களத்தே குதித்திடு.
அன்று , உன்னை, இப்பிரபஞ்சத்தின்
ஒவ்வொரு துளியும்
ஒவ்வொரு எழிற்பட்சியும்,
மெல்லிய பூந்தென்றலும், நிலமடந்தையும்,
எழில் வானும், நட்சத்திரங்களும், கோள்களும்,
இளங்காலைப் பனியின் ஒவ்வொரு துளியும்,

இளம்பரிதியின் ஒவ்வொரு கதிரும்,
விருட்சத்தின் ஒவ்வோர் இலையும்,
வாழ்த்தி வழியனுப்பிடும். ஆம்!
வாழ்த்தி வழியனுப்பிடும். ஆம்!
வாழ்த்தி வழியனுப்பிடும்!

என்று உன்னைச் சுற்றிலும் போராட்டமும், குமுறலும், விரக்தியுமே
வாழ்வென்றாகி விடுகின்றனவோ,
என்று உன்னைச் சுற்றிலும் , ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணியும்,
ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு கணத்தின்
ஒவ்வொரு துளியுமே..
வாழ்வே ஒரு கேள்வியாக, உயிர்ப் போர்முனையாக,
உருவாகி விடுகின்றதோ, அன்று , ஆமாம் அன்று,
நீ உனது போர்ப்பிரகடனத்தைத்
தொடங்கிவிடு!
சுதந்திரக் காற்றினைத் தரிசிப்பதற்கான
தர்மத்திற்கான உன் போர் முரசத்தினைக் கொட்டிடு.
கோழைத்தனத்தினைக் குதறியெறிந்துவிட்டுக்
களத்தே குதித்திடு.
அன்று , உன்னை, இப்பிரபஞ்சத்தின்
ஒவ்வொரு துளியும,
ஒவ்வொரு எழிற் பட்சியும்,
மெல்லிய பூந்தென்றலும், நிலமடந்தையும்,
எழில் வானும், நட்சத்திரங்களும், கோள்களும்,
இளங்காலைப் பனியின் ஒவ்வொரு துளியும்,
இளம்பரிதியின் ஒவ்வொரு கதிரும்,
விருட்சத்தினொவ்வோர் இலையும்,
வாழ்த்தி வழியனுப்பிடும். ஆம்!
வாழ்த்தி வழியனுப்பிடும். ஆம்!
வாழ்த்தி வழியனுப்பிடும்!

**24.** அமெரிக்கத் தடுப்பு முகாம் அனுபவங்கள்!

கனடாவுக்குச் செல்லும் வழியில் டெல்லா எயார் லைன்ஸ் பொச்டனிலிருந்து மொன்ரியால் ஏற்றிச் செல்ல மறுத்ததால் பொஸ்டனில் அகதியாக அடைக்கலம் கோரினேன். என்னை நியு யோர்க் மாநகரிலுள்ள புரூக்லின் என்னும் தடுப்பு முகாமில் மூன்று மாதம் தடுத்து வைத்திருந்தார்கள். அது பர்றி விபரிக்கும் கவிதை இது.

அமெரிக்கத் தடுப்பு முகாமில்
அடியேனின் அனுபவங்களைக் கூறுவேன்.

அகதியாகக் கனடா செல்லும் வழியில்
ஆகாய விமானம் , டெல்டா ஆகாய விமானம்
மொன்ரியால் ஏற்றிச் செல்ல மறுத்ததால்
மாநகர் பாஸ்டனில் அடைக்கலம் கோரினேன்.

அமெரிக்கத் தடுப்பு முகாமில்
அடியேனின் அனுபவங்களைக் கூறுவேன்.

சட்டபூர்வமாகவே அடைக்கலம் கோரினேன்.
எட்டு மணி Transit விசாவுடன் கோரினேன்.
சட்டபூர்வக் கோரிக்கையாளர் என்றால்
எட்டுமணி கடந்ததும் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்.

அமெரிக்கத் தடுப்பு முகாமில்
அடியேனின் அனுபவங்களைக் கூறுவேன்.

சட்டபூர்வக் குடியேற்றக்காரர் எட்டுமணியானதும்
சட்டவிரோதக் குடியேற்றக்காரர். ஆனால்
சட்டபூர்வமாகப் பிணையில் செல்லலாம்.
சட்டபூர்வமாகப் பிணையில் செல்லலாம்.

அமெரிக்கத் தடுப்பு முகாமில்
அடியேனின் அனுபவங்களைக் கூறுவேன்.

நீரில், விமான நிலையத்தில் ஆவணமின்றி
யாரும் அகப்பட்டால் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்.
சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்றால்
சட்டரீதியான பிணையும் இல்லை.
அகதிக் கோரிக்கைத் தீர்ப்பு வரையில்
அவர் தடுப்பு முகாமில்தான்.

அமெரிக்கத் தடுப்பு முகாமில்
அடியேனின் அனுபவங்களைக் கூறுவேன்.

சட்டபூர்வமாக நுழைந்தவர்கள்
சட்டவிரோதக் குடிகளாக மாறினும்
அகதிக்கோரிக்கைத் தீர்ப்பு வரையில்
அவர் பிணையில் வெளியில் செல்லலாம்.

அமெரிக்கத் தடுப்பு முகாமில்
அடியேனின் அனுபவங்களைக் கூறுவேன்.

நானோ சட்டபூர்வமாக நுழைந்தேன்.
நான் அடைக்கலம் கோரியதும் சட்டபூர்வமாகத்தான்.
எட்டு  மணி கடந்ததும் சட்டவிரோதக்குடியானேன்.
என்னைப்  பிணையில் விட்டிருக்க வேண்டும்.
ஆனால்
தவறாகச் சட்டவீரோதக் குடியாக
அடைக்கலம் கோரினேன் என்று கருதியதால்
அடைத்து வைத்தார் மூன்று மாதம்
அமெரிக்கத் தடுப்பு முகாமில்.

அமெரிக்கத் தடுப்பு முகாமில்
அடியேனின் அனுபவங்களைக் கூறினேன்.  நான்
அடியேனின் தடுப்பு முகாம்
அனுபவங்களைக் கூறினேன்.

பின்னர் ஒரு தடவை
இன்னும் விரிவாக என்
தடுப்பு முகாம் அனுபவங்களை
எடுத்துரைப்பேன்.. நான் எடுத்துரைப்பேன்.

**25.** ஆழ்மனத்தில் அழியாத நினைவுச் சித்திரங்கள்**.**

ஆழ்மனத்தில் அழியாத நினைவுச் சித்திரங்கள்.
வாழ்வில் பால்யப் பருவத்து நினைவுகளே.

என் பால்ய காலத்து நண்பனை
நான் நேற்று சந்தித்தேன்.
நீண்ட நாட்களின் பின்பு
ஆண்டுகள் பல கடந்த பின்பு
நேற்றுத்தான் சந்தித்தேன் அவனை.

பதின்ம வயதுகளில் அவனுடன் கழித்த நினைவுகள்
படம் விரித்தன நெஞ்சில்.
யாழ் நகரத்தின் தெருக்களில் அவனுடன்
வாழ்வைக் கழித்த பொழுதுகள் தெரிந்தன.
ஆழ்மனத்தில் அழியாத நினைவுச் சித்திரங்கள். - வ.ந.கிரிதரன் -

ஆழ்மனத்தில் அழியாத நினைவுச் சித்திரங்கள்.
வாழ்வில் பால்யப் பருவத்து நினைவுகளே.

ஒரு தடவை கீரிமலை சென்றோம்.
ஒல்லித்தேங்காய் இல்லாவிட்டால் கேணியில்
நீந்த முடியாத நிலையில் நான்.
நீந்துவதில் பேராற்றல் அற்ற நிலையில் நான்.
அவனும் இன்னுமொரு நண்பனும் நீந்தினார்கள்,
அவர்கள் நீந்துவதை வேடிக்கை பார்த்து நின்றேன்.

எதிர்பாராத தருணத்தில் அருகில் வந்தவர்கள்
என்னைக் குண்டுக்கட்டாகத் தூக்கிக்
கேணிக்குள் வீசிச் சிரித்தார்கள்.
கணப்பொழுதில் நடந்த நிகழ்வென்பதால்
திக்குமுக்காடிப் போனேன் நான்,
தட்டுத்தடுமாறி நீந்தினேன். கரை சேர்ந்தேன்.
அணிந்திருந்த ஆடைகள் நனைந்து விடவே]
அந்திவரை அங்கிருந்தோம்.
ஆடை உலர்ந்ததும் வீடு திரும்பினோம்,
அன்று முழுவதும் அவர்கள் சிரித்தார்கள்.
அவனைப் பார்த்ததும் நினைவுக்கு வந்தது.

ஆழ்மனத்தில் அழியாத நினைவுச் சித்திரங்கள்.
வாழ்வில் பால்யப் பருவத்து நினைவுகளே.

பதின்ம வயதில் நண்பனை முதற்காதல்
பற்றிக்கொண்டு விட்டது. நெஞ்சங் கவர்ந்தவள்

பாடசாலை விட்டு வீடு திரும்பும் பஸ்ஸில்
பாய்ந்து சென்று ஏறுவான். கூடவே எதுவும்
புரியாமல் நானும் ஏறுவேன்.
பின்னர்தான் தெரிந்தது நண்பனின்
பரிதவிக்கும் காதல் மனசு பற்றி.

நேற்று அவனைக் கண்டபோது
ஊற்றென அந்நினைவுகள் பெருகின.
மானுட வாழ்க்கையில் முதற் காதல்
முக்கியமானதோர் படிக்கட்டு.
முதற்காதல் எப்போதுமே
முடிந்த காதல்தான்.
தொடர்ந்த காதல் அல்ல.
ஆனால்
இருப்பு உள்ளவரை
இருக்கும் காதல்.
தொடரும் காதல்.

நகரில் இவனுடன் அலைந்த பொழுதுகள்,
நகரில் இவனுடன் பார்த்த படங்கள்,
நகரில் இவனுடன் ஆற்றிய உரையாடல்கள்.
நகரில் இவனுடன் அருந்திய முதற் கள்
எல்லாமே நினைவுக்கு வந்தன.
என் பால்ய , பதின்மப் பருவத்து
இன் நண்பன் இவனைக் கண்டபோது.

ஆழ்மனத்தில் அழியாத நினைவுச் சித்திரங்கள்.
வாழ்வில் பால்யப் பருவத்து நினைவுகளே.

**26.** இயற்கையின் பேரழகு.

இயற்கையின் அழகோ பேரழகு.
செயற்கையின் நிலையோ சீரழிவு.

இயற்கையை ஆராதிப்பதில் எப்பொழுதும் .
பெருவிருப்பு உண்டு எனக்கு.
இருப்பை மறந்து இரசிப்பேன்.
பெருவிருப்பு அத்தகையது. ஆம்.

இயற்கையின் அழகோ பேரழகு.
செயற்கையின் நிலையோ சீரழிவு.

இருளின் மத்தியில் ஒளியென்னும்
ஒரு நம்பிக்கை நட்சத்திரம்
அதிகாலை விடிவெள்ளி என்பேன்.
அங்கு அது கோள் என்றபோதும்.
நட்சத்திரம் என்னும் சொல்லை
நான் ஒரு குறியீடாகவே
இங்கு பாவித்தேன். அறிவீர்.

இயற்கையின் அழகோ பேரழகு.
செயற்கையின் நிலையோ சீரழிவு.

இரவு வானை எனை மறந்து
இரசிப்பேன். எத்தனை முறை என்றாலும்.
இரவு வானில் கொட்டிக் கிடக்கும்
நட்சத்திரக் கன்னியரின்  பேரெழிலில்
நான் மறந்து கிடப்பேன் எனை.

இயற்கையின் அழகோ பேரழகு.
செயற்கையின் நிலையோ சீரழிவு.

இரவில் சுடரும் அனைத்தும் அறிவைச்
சுரக்கும் அறிவுச் சுரங்கங்கள் என்பேன்.
சுடர்பவை மதி என்றாலும் மற்றும்
சுடர் என்றாலும் அவ்விதமே கூறுவேன்.

இயற்கையின் அழகோ பேரழகு.
செயற்கையின் நிலையோ சீரழிவு.

இருள் நீக்கி வரும் ஒளி.
இவ்விதமே அவற்றை நான் கருதுவேன்.
அவ்வகையில் எவை எனக்குப் போதிக்கும்

ஆசிரியர்கள். ஆம்.போதிக்கும் ஆசிரியர்களே.

இயற்கையின் அழகோ பேரழகு.
செயற்கையின் நிலையோ சீரழிவு.

**27.** தரணித் தடாகத்தில் அன்புத்தாமரை பூக்கட்டும்

மானுடர் வாழும் பூமி இது.
மனித நேயம் வேண்டும் பூமியிது.

மதம்! மொழி! இனம்! நிறம்!,
மதிப்போம் அவரவர் போக்கை. ஆனால்
மானுடரே. வேண்டாம் பிரிவினைகள்.
மானுடரே வேண்டாம் மோதல்கள்.

ஐந்து விரல்கள் நமக்கு.
அனைத்தும் அளவில் ஒன்றல்ல.
ஐந்தும் சேர்ந்தாலே பயன்.
அல்லாவிடில் பயன் என்ன?

மானுடர் வாழும் பூமி இது.
மனித நேயம் வேண்டும் பூமியிது.

அனைவரும் இணைவதால் விளைவது
ஆக்கமே. ஆரோக்கியம் மிக்கது.
அனைவரும் இணைவோம். செயற்படுவோம்.
ஆக்கம் விளைவிப்போம். பயனடைவோம்.

தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால்
ஆக்கத்தை உருவாக்க வேண்டுமென்றால்
தாக்குதல்களை நிறுத்துவோம். தலை நிமிர்வோம்.
தரணித் தடாகத்தில் அன்புத்தாமரை பூக்கட்டும்.

மானுடர் வாழும் பூமி இது.
மனித நேயம் வேண்டும் பூமியிது.

**28.** என் மோகம் தீர்க்க மாட்டாயா அன்பே!

நம்ப முடியாத உலகமிது. எதையும்
நம்ப முடியாத உலகமிது.

அன்பே!
உன்னைப் பார்த்ததுமே
உன் மேல் மையலுற்றேன்.
உன் கண்கள்,
உன் உதடுகள்,
உன் புன்னகை
என்னைக்  கிறங்க வைத்தன.

உன் மேல் மோகம் கொண்டேன்.
நான்
உன் மேல் மோகம் கொண்டேன்.

நான் எதிர்பார்த்த பேரழகின் பொக்கிசம் நீ
என்றெண்ணினேன்.
உன்னுடன் நட்பு கொள்ள விரும்பினேன்.
இவ்வளவு காலமும் எங்கிருந்தாய் நீ
அவ்வளவு தூரம் பிடித்திருந்தது எனக்கு.
அன்பே உன்
வனப்பு.

அன்பே!
உன்னைப் பார்த்தாலும்
உன்மேல் மையலுற்றாலும்
உன்னை நான் மோகித்தாலும்
என்னால் உன்னை அடைய முடியாது.
என்னால் உன்னை அடைய முடியாது.
அதற்கு நான் கொடுத்து வைத்தவனல்லன்.
அன்பே. கொடுத்து வைத்தவனல்லன்.

உன் மயக்கும் புன்னகை
என்னைத் மோகத்தீயில் தகிக்க வைத்தாலும்
உன்னை அடைவது
எனக்குச் சாத்தியமில்லை.
உன் தீர்க்கமான பார்வை
என் இதயத்தைத் தீண்டினாலும்
உன்னை என்னால்
தீண்ட முடியாது.

அன்பே. என் செய்வேன்.

முள்ளாகக் குற்றும் என்
மோகத்தை எப்படித் தீர்பேன்?
மோக முள்ளிலிருந்து
எப்படி விடுபடுவேன்?

நீ மட்டும்
செயற்கை அறிவு ஏ.ஐ
சமைத்திட்ட அழகியாக
இல்லாதிருந்தால்...
என்று மட்டுமே
என்னால் ஏங்க முடிகிறது.

ஏ.ஐ அழகியே.
ஏமாற்றி விட்டாயடி என்னை.
ஏமாற்றி விட்டாயடி என்னை.
யாரைத்தான் நம்புவேன் இப்பூமியிலே. நான்
யாரைத்தான் நம்புவேன் இப்பூமியிலே.

நம்ப முடியாத உலகமிது. எதையும்
நம்ப முடியாத உலகமிது.

**29.** எம்ஜிஆர் படப் பாடல்கள்

எம்ஜிஆர் படப் பாட்டென்றால்
எனக்கு மிகவும் பிடிக்கும்.

எம்ஜிஆர் படப் பாட்டென்றால்
எனக்கு மிகவும் பிடிக்கும்.
ஏன் என்று கூறுவேன்.
எடுத்துரைப்பேன் நான் கேளீர்.

எம்ஜிஆர் படப் பாட்டென்றால்
எனக்கு மிகவும் பிடிக்கும்.

வாசிக்கும் வாய்ப்பற்ற மக்கள்
வசிக்கின்றார் கோடிக் கணக்கில்.
நூல் படிக்கும் வாய்ப்பற்றோர்
நூல் எம்ஜிஆர் பாடல்களே.

எம்ஜிஆர் படப் பாட்டென்றால்
எனக்கு மிகவும் பிடிக்கும்.

நல்ல கருத்தை எடுத்துரைத்தால்
சொல்வதை மீண்டும் சொல்வதால்
நல்ல கருத்து நிலைக்கும்.
நிலைத்து நிற்கும் மூளையில்.

எம்ஜிஆர் பாடல் செய்வதெல்லாம்
எடுத்துக் காட்டுவது எல்லாம்
நல்ல கருத்தை விதைப்பதுவே.
உள்ளத்தில் உரம் ஏற்றுவதே.

எம்ஜிஆர் படப் பாட்டென்றால்
எனக்கு மிகவும் பிடிக்கும்.

கற்றவர் கல்லாதவர் அனைவரும்
கேட்பது எம்ஜிஆர் பாடல்களை.
கேட்பதால் நல்ல கருத்துகள்
கேட்பவர் உள்ளங்களில் படியும்.

எம்ஜிஆர் படப் பாட்டென்றால்
எனக்கு மிகவும் பிடிக்கும்.

வாழ்வின் வெற்றிக்கு நூல்கள்
தாழ்வு நீங்கிட நூல்கள்

எத்தனை நூல்கள் எழுதுவர்.
அத்தனையும் எவர் வாசிப்பர்.

அத்தகைய கருத்துகளை வழங்கும்
எம்ஜிஆர் படப் பாடல்கள்
சமுகப் பிரக்ஞை மிக்கவை.
சமூக நீதி போதிப்பவை.

எம்ஜிஆர் படப் பாட்டென்றால்
எனக்கு மிகவும் பிடிக்கும்.

விடுதலையை வேண்டும் பாடல்கள்.
வறுமைக்கு வழிகூறும் பாட;ல்கள்.
எண்ண மேன்மைப் பாடல்கள்.
எளியவரை ஏற்றிடும் பாடல்கள்.

ஆரோக்கியக் கருத்துள்ள பாடல்கள்.
அனைவரையும் எழவைக்கும் பாடல்கள்.
அனைவரையும் வாழ வைக்கும்
அருமையான எம்ஜிஆர் பாடல்கள்.

எம்ஜிஆர் படப் பாட்டென்றால்
எனக்கு மிகவும் பிடிக்கும்.

**30.** தமிழும் திராவிடமும்

தேவநேயப் பாவாணர் தமிழ் அறிஞர்.
தமிழ் ஆய்வில் பேர் அறிஞர்.

திரவிடம் மூலம் தமிழம்
திராவிட மூலம் திரவிடம்.
திராவிட மொழிகள் அனைத்தும்
தமிழ் மொழியின் குழந்தைகளே.

தேவநேயப் பாவாணார் சொன்னார்.
திராவிட மூலம் திரவிடமே.
திரவிடத்தின் மூலம் தமிழமே.
திராவிடத்தின் மூலம் தமிழே.

தேவநேயப் பாவாணர் தமிழ் அறிஞர்.
தமிழ் ஆய்வில் பேர் அறிஞர்.

குழந்தைகள் கோபம் கொண்டாலும்
தாய் வன்மம் கொள்வதுண்டோ?
தன் குழந்தைகள் எதிர்ப்பினும்
தாய்த் தமிழ் தளும்புவதில்லை.

தமிழன்னை பொறுமை மிக்கவள்.
தமிழன்னை கண்ணியம் காப்பவள்.
தமிழன்னை கடமையில் ஊறியவள்.
தமிழன்னை கட்டுப்பாடு உடையவள்.

தேவநேயப் பாவாணர் தமிழ் அறிஞர்.
தமிழ் ஆய்வில் பேர் அறிஞர்.

தமிழ்க் குழந்தைகளே மோதாதீர்.
தாயின் வழி செல்வீர்.
தமிழ் உங்கள் தாய்
திராவிட மண்ணின் குழந்தைகளே.

தேவநேயப் பாவாணர் தமிழ் அறிஞர்.
தமிழ் ஆய்வில் பேர் அறிஞர்.

தமிழே திராவிடம் ஆகும்.
திராவிடமே திரவிடம் ஆகும்.
திரவிடமே தமிழம் ஆகும்.
தமிழே திராவிடம் ஆகும்.

தேவநேயப் பாவாணர் தமிழ் அறிஞர்.
தமிழ் ஆய்வில் பேர் அறிஞர்.

தேவநேயப் பாவாணர் சொன்னது இதுதான்.
தமிழ் ஆய்வில் அறிஞர் அவர்
சொல்லியது இதனைத் தான்.
சொல்லியது இதனைத் தான்.

**31.** விண்ணைப் போன்றதொரு நூலகம்

விண்ணைப் போன்றதொரு நூலகம்
மண்ணில் உண்டோ? இந்த
மண்ணில் உண்டோ?

விரிந்திருக்கும் விண் எனக்கு
விளக்கும் ஓர் ஆசான்.
இருப்பை விளக்கும் ஆசான்.
இங்குதான் சிந்தனைகள் விரிவடையும்.

விண்ணைப் போன்றதொரு நூலகம்
மண்ணில் உண்டோ? இந்த
மண்ணில் உண்டோ?

விரிந்து செல்லும் விண்ணுக்கு
எங்குண்டு ஒரு முடிவு?
அன்றொரு நாள் பெருவெடிப்பில்
இன்றுள்ள விண் தோன்றியதாம்.

விண்ணைப் போன்றதொரு நூலகம்
மண்ணில் உண்டோ? இந்த
மண்ணில் உண்டோ?

சுடர்கள், கோள்கள், எரியும்
சுடர்கள், கருமைத் துளைகள்
நீண்டவால் தூம கேதுக்கள்
அண்டக் குழுக்களும் உண்டாம்.

விண்ணைப் போன்றதொரு நூலகம்
மண்ணில் உண்டோ? இந்த
மண்ணில் உண்டோ?

அருகில் உள்ள சுடர்
அடைவதற்கே ஒளியாண்டுகள் நான்கு.
ஒளிவேகத்தின் சிறுதுளி நம்வேகம்.
வழியுண்டா விரைவில் செல்வதற்கு/

விண்ணைப் போன்றதொரு நூலகம்
மண்ணில் உண்டோ/ இம்
மண்ணில் உண்டோ?

விண்ணைப் பார்க்கையில் எனக்கு
மண்ணில்நம் இருப்பு பற்றிய

வினாக்கள் எழும் அலைஅலையென.
விடைகள் அற்ற வினாக்கள்.

விண்ணைப் போன்றதொரு நூலகம்
மண்ணில் உண்டோ? இந்த
மண்ணில் உண்டோ?

எண்ணங்களை விரிவடைய வைக்கும்
விண்ணைப் போன்ற பெட்டகம்
அறிவுப் பெட்டகம் உண்டோ.
அறிவுப் பெட்டகம் உண்டோ?

விண்ணைப் போன்றதொரு நூலகம்
மண்ணில் உண்டோ? இந்த
மண்ணில் உண்டோ?

இருப்பின் உண்மைகளை வைத்திருக்கும்
அறிவுப் பெட்டகம் விண்ணே.
காலவெளிப் பின்னலே விரிவிண்.
ஆம்.
காலவெளிப் பின்னலே விரிவிண்.

விண்ணைப் போன்றதொரு நூலகம்
மண்ணில் உண்டோ? இந்த
மண்ணில் உண்டோ?

### 32. எண்ணிம நூலகம் 'நூலகம்'

நூல்கள் இன்பமூட்டும் இலக்கியப் படைப்புகள் மட்டுமல்ல. ஒரு காலகட்ட வரலாற்றை, பண்பாட்டை, மானுடச் சமூக வாழ்வை எடுத்துரைக்கும் வரலாற்று ஆவணங்களும் கூட. இன்று எண்ணிமப் பிரதிகளாக எழுத்துப் பிரதிகள் காலத்தின் சிதைவுகளுக்குள் சிதைந்து போகாது நிலைத்து நிற்கும் தொழில் நுட்பம் இருக்கின்றது .எண்ணிம நூலகமான 'நூலகம்' எழுத்துப் பிரதிகளை அவை நூல்களாக இருக்கட்டும், பத்திரிகைகளாக இருக்கட்டும், பல்வேறு மலர்களாக இருக்கட்டும் சேகரிக்கும் அரிய பணியினைச் செய்து வருகின்றது.

என் பால்யப் பதின்ம வயதுப் படைப்புகள் பலவற்றை நூலகத்தின் சேகரிப்பிலிருந்து என்னால் மீண்டும் பெற முடிந்தது. நூலகத்தின் சேவையைப் பாராட்டுவோம். அதற்கு ஆதரவு நல்குவோம். நூற் பிரதிகளை வழங்குவோம், நிதியினையும் அள்ளிக் கொடுப்போம். நூலகம் தளத்தின் இணையத்தள முகவரி: https://noolaham.org

'நூலகம்' எண்ணிம நூலகம்.
நூலகம் வரலாற்றுப் பெட்டகம்.

நூலகம் பிரதிகளைச் சேகரிக்கும்
நல்லதொரு திட்டம் என்போம்.
நல்ல திட்டத்தை ஆதரிப்போம்.
எல்லோருக்கும் எடுத்து உரைப்போம்.

புத்தகங்கள் வரலாற்று ஆவணங்கள்.
சித்தம் உயர்வுற வைக்கும்.
இத்தரையில் எம் வரலாற்றை
சத்தமிட்டு எடுத்துரைக்கும் ஆவணங்கள்.

எத்தனை வருடங்கள் கடப்பினும்
புத்தகங்கள் நிலைத்து நிற்கும்
மண்ணில் சரித்திரச் சின்னங்களாக,
எண்ணிமப் பிரதிகளாக என்றும்.

'நூலகம்' எண்ணிம நூலகம்.
நூலகம் வரலாற்றுப் பெட்டகம்.

ஓலைச் சுவடிகளைப் பாதுகாத்தோம்.
ஓலைகளைக் கறையான்களும் தின்றன.
ஓலைகளைக் காலமும் சிதைத்தது.
ஓலைச் சுவடிகள் இன்றும்
ஒருகால கட்டச் சின்னங்கள்.
ஓம். வரலாற்றுச் சின்னங்கள்.

புத்தகங்கள் சரித்திரச் சின்னங்கள்.
புத்தகங்கள் இலக்கிய ஊற்றுகள்.
புத்தகங்கள் அறிவை வளர்க்கும்.
புத்தகங்கள் வாழ்வை உயர்த்தும்.

நூலகம் பிரதிகளைச் சேகரிக்கும்
நல்லதோர் திட்டம் என்போம்.
நிதி கொடுத்து  உதவுவோம்.
நூற் பிரதிகளை வழங்குவோம்.

'நூலகம்' எண்ணிம நூலகம்.
நூலகம் வரலாற்றுப் பெட்டகம்.
நூலகம் பிரதிகளைச் சேகரிக்கும்
நல்லதொரு திட்டம் என்போம்.

'நூலகம்' எண்ணிம நூலகம்.
நூலகம் வரலாற்றுப் பெட்டகம்.

**33.** நெஞ்சில் நிறைந்தாய் கண்ணம்மா!

நெஞ்சில் நிறைந்தாய் கண்ணம்மா. என்
நெஞ்சில் நிறைந்தாய் கண்ணம்மா.

அதிகாலை நேரம் கண்ணம்மா
ஆடி , அசைந்து வருவாய் கண்ணம்மா.
மெல்லிருளில் தண் நிலவாக
மெதுவாக நடந்து வருவாய் கண்ணம்மா.

மார்புற புத்தகம் தாங்கி
மண் நோக்கி நடந்து வருவாய் கண்ணம்மா.
மண்பார்த்த போதுமுன் முகத்தில்
முறுவல் ஓடிமறையும் கண்ணம்மா.

நெஞ்சில் நிறைந்தாய் கண்ணம்மா. என்
நெஞ்சில் நிறைந்தாய் கண்ணம்மா.
காதலுக்கு அர்த்தம் தந்தாய் கண்ணம்மா.
களிப்பால் உள்ளம் துள்ள வைத்தாய் கண்ணம்மா.
நினைவில் நிலைத்து நிற்பாய் கண்ணம்மா.
நெஞ்சில் நிறைந்து நிற்பாய் கண்ணம்மா.

பாட்டுக்கொரு பாவலனுக்கு   ஒரு கண்ணம்மா.
பாவலன் இவனுக்கும் ஒரு கண்ணம்மா.
கண்ணம்மா உன்னை நினைக்கையிலே
எண்ணமெல்லாம் களிப்பால் நிறையுதடி.

நெஞ்சில் நிறைந்தாய் கண்ணம்மா. என்
நெஞ்சில் நிறைந்தாய் கண்ணம்மா.

நீயற்ற மண்ணில் இன்பம் இல்லை.
நின் குரலற்ற காற்றில் தண்மையில்லை.
காதல் நோயால் வாடுமிவன் வருத்தம்
கண்ணம்மா இல்லாமல் எப்படித் தீரும்.

கண்ணம்மா என் நெஞ்சில் நிறைந்தாயடி.
எண்ணமெல்லாம் எப்பொழுதும் நீ ஆனாய்.
கண்ணம்மாவின் உருவம் களி தரும்.
கண்ணம்மாவின் நினைப்பும் இன்பம் தரும்.

நெஞ்சில் நிறைந்தாய் கண்ணம்மா. என்
நெஞ்சில் நிறைந்தாய் கண்ணம்மா.

**34.** ஆர்டிஸ்ட் மணியத்தின் கட் அவுட்டுகள்!

ஆர்டிஸ்ட் மணியத்தின் கட் அவுட்டுகள்
ஆடிட வைக்கும். பாடிட வைக்கும்.

மணியத்தின் ஆர்டிஸ்ட் மணியத்தின்
மக்கள் திலகத்தின் கட் அவுட்டுகள்
எம்மை மகிழ்வித்த காலமது.
எண்ணிப் பார்த்தால் மகிழ்வுதான்.

வாத்தியாரின் புதுப் படமென்றால்
வாண்டுகள் எங்களுக்கோ கொண்டாட்டம்தான்.
முதல் நாளிரவே காட்சி தொடங்கிவிடும்.
முண்டியடித்தபடி வாத்தியார் இரசிகர்கள்.

ஆர்டிஸ்ட் மணியத்தின் கட் அவுட்டுகள்
ஆடிட வைக்கும். பாடிட வைக்கும்.

திரையரங்கின் முன் உயர்ந்து நிற்கும்
திகைப்பை ஊட்டும் எம்ஜிஆரின்
கட் அவுட்டுகள் கண்டாலே
களிப்பு நெஞ்சில் பொங்கும்.

ராணி திரையரங்கத்தின் முன்
அடிமைப் பெண் மாட்டுக்கார வேலன்
ராஜா திரையரங்கத்தின் முன்
காவல்காரன் நீரும் நெருப்பும்

கட் அவுட்டுகள் இன்றும்
கண்களில் தெரியும், களிப்பூட்டும்.
சிட்டுகளாகச் சிந்தனைக் குருவிகளைச்
சிறகடிக்க வைக்கும், நினைவூட்டும்.

ஆர்டிஸ்ட் மணியத்தின் கட் அவுட்டுகள்
ஆடிட வைக்கும். பாடிட வைக்கும்.

மணியத்தின் கட் அவுட்டுகள்
மகிழ்ச்சியை எமக்குத் தந்தன.
எம் வாழ்க்கையில் அவை
என்றும் பின்னிப் பிணைந்தவை.

காலக் கப்பல்கள் மணியத்தின்
கட் அவுட்டுகள் பற்றிய நினைவுகள்.
நினைவுகளில் ஏறி நாம்

நேற்று சென்றிட வைக்கும்
காலக் கப்பல்கள் மணியத்தின்
கட் அவுட்டுகள் பற்றிய நினைவுகள்.

ஆர்டிஸ்ட் மணியத்தின் கட் அவுட்டுகள்
ஆடிட வைக்கும். பாடிட வைக்கும்.

பால்ய பதின்மப் பருவங்களில்
பேருவகை எமக்குத் தந்தவை
அகத்தில் நிலைத்து நிற்கும்
ஆனந்தத்தில் எமைக் குளிப்பாட்டும்.

ஆர்டிஸ்ட் மணியத்தின் கட் அவுட்டுகள்
ஆடிட வைக்கும். பாடிட வைக்கும்.

**35.** செயற்கை அறிவுத் தொழில் நுட்பம்.

செயற்கைத் தொழில் நுட்பம்
செயற்கரிய செய்யும் தொழில் நுட்பம்.

செயற்கை அறிவுத் தொழில் நுட்பம்
இயற்கை அல்ல என்பர் சிலர்.
செயற்கைக்குள் வாழ்வைத் தள்ளும்
இயற்கையாக வாழுங்கள் என்பர் அவர்.

தொழில் நுட்பம் எது என்றாலும்
தொழிலை மேம்படுத்தும் தன்மை மிக்கதே.
புதியனவற்றை ஏற்பதும், பயன் பெறுவதும்
புதிய விடயம் ஒன்றும் அல்லவே.

செயற்கைத் தொழில் நுட்பம்
செயற்கரிய செய்யும் தொழில் நுட்பம்.

சாதாரண மக்கள் எழுத்தாளர்கள் ஆனார்கள்.
செயற்கரிய  சாதனைகள் தமைப் புரிந்தார்கள்.
வழி வகுத்தது இணையத்  தொழில் நுட்பம்.
வலைப்பதிவுகள் , you tube சானல்கள் மூலம்.

மக்கள் ஊடகவியலாளர்கள் ஆனதால் இங்கு
எழுத்தாளர்கள் எவரும் காணாமல் போகவில்லை.
எழுத்தாளர்களும் தொழில் நுட்பத்தை ஏற்றனர்.
ஏற்றதால் அவரும் பயன் அடைந்தார்.

செயற்கைத் தொழில் நுட்பம்
செயற்கரிய செய்யும் தொழில் நுட்பம்.

மக்கள் இசை அமைப்பாளர்கள் ஆக்கியது
மகத்தான செயற்கை அறிவு நுட்பம்.
இசையின் நுட்பங்களை அறிந்தவர்களை அது
இல்லாமல் இங்கு செய்யவில்லை அறிவீர்.

மானுட வளர்ச்சியிலே தொழில் நுட்பங்கள்
மலர்ச்சி தரும். மேன்மை தரும்.
ஆரோக்கியமாக அரவணைத்தால் பயன் கிட்டும்.
சீரடையும் மானுட குலம் நிச்சயம்.

செயற்கைத் தொழில் நுட்பம்
செயற்கரிய செய்யும் தொழில் நுட்பம்.

**36** படைப்பும், விடை தேடும் நெஞ்சும்.

படைப்பின் அற்புதத்தில் பேரழகில்
எனை மறக்கின்றேன் எப்பொழுதும்.

யார் படைத்தார் பேரண்டமிதை.
பார்த்தால் பிரமிக்க வைக்கும்
பேரண்டத்தை யார் படைத்தார்?
யார் படைத்தார்/ ஏன் படைத்தார்?

நுண்ணியதிலும் நுண்ணியதான குவாண்டம்
உருப்பெருக் காட்டிகள் இல்லையெனில்
உள்ளவற்றைப் -பார்க்க முடியாது.
உள்ளவற்றை உணர முடியாது.

படைப்பின் அற்புதத்தில் பேரழகில்
எனை மறக்கின்றேன் எப்பொழுதும்.

பெருந் தொலைவுகள் விரிந்திருக்கும்
பிரபஞ்சப் புதிர்களை அறிவதற்கு,
அருகில் உள்ளதுபோல் காட்டும்
தொலைக் காட்டிகள் தேவையாகும்.

படைப்பின் அற்புதத்தில் பேரழகில்
எனை மறக்கின்றேன் எப்பொழுதும்.

முப்பரிமாணம் தெரியும் உலகை
எப்பொழுதும் நாம் பார்க்கின்றோம்.
முப்பரிமாணங்ள் மீறி மேலும்
உலகுகள் உண்டோ நாமறியோம்.

பரிமாணங்கள் மீறிய உயிர்கள்,
மூலகங்கள் மாறிய உயிர்கள்,
விரிந்து கிடக்கும் பெருவெளியில்
ஒளிந்து கிடக்கின்றனவோ யாரறிவார்?

படைப்பின் அற்புதத்தில் பேரழகில்
எனை மறக்கின்றேன் எப்பொழுதும்.
படையெடுப்பர் சிந்தனைப் போர்வீரர்.
விடைநாடித் தேடும் நெஞ்சு.

படைப்பின் அற்புதத்தில் பேரழகில்
எனை மறக்கின்றேன் எப்பொழுதும்.

**37.** மழைபோல் பொழிவோம்!

மழை பொழியும் இரவென்றால்
மகிழ்ச்சியில் ஆழ்வேன் எப்பொழுதும்.

சட்டச் சடவெ\ன்றே சப்திக்கும்
ஓட்டுக் கூரையின் ஓசையிலே
கட்டுண்டு கிடந்திடுவேன் அப்போது.
களிதரும் பொழுது அதுவாகும்.

மழை பொழியும் இரவென்றால்
மகிழ்ச்சியில் ஆழ்வேன் எப்பொழுதும்.

வான்துளைத்து மின்னல் கோடிழுக்கும்.
பேரிடியோ பெருந்தொலைவு கேட்கும்.
நான் படுக்கையில் புரண்டிருப்பேன்.
நிலைமறந்து மெய்  மறப்பேன்.

மழை பொழியும் இரவென்றால்
மகிழ்ச்சியில் ஆழ்வேன் எப்பொழுதும்.

வயற்புறத்தே தவளைகள் வாய்ப்பாட்டு
விடியும் வரையும் தொடர்ந்திருக்கும்.
வெள்ளம் பெருக்கோடி பாய்ந்திடும்.
வழியெங்கும் நிலங்கழுவிச் சென்றிடும்.

மழை பொழியும் இரவென்றால்
மகிழ்ச்சியில் ஆழ்வேன் எப்பொழுதும்.

மழைவெள்ளம் சொல்லும் அறிவுரையாம்
நிலம் துடைக்குமதன் செயற்பாடு.
ஊருக்கும் நன்மை செய்யும்
மழைவெள்ளம் கண்டு களிப்பேன்.

மழை பொழியும் இரவென்றால்
மகிழ்ச்சியில் ஆழ்வேன் எப்பொழுதும்.

பயிர் வளர்க்க மண்ணை
பதப்படுத்த மழை பெய்யும்.
உயிர் உலகில் இருப்பதற்கு
உதவப் பெய்வது மழையாகும்.

மழை பொழியும் இரவென்றால்
மகிழ்ச்சியில் ஆழ்வேன் எப்பொழுதும்.

மழைபோல நாமும் பொழிவோம்.
மற்றவர்க்குப் பயன் தருவோம்.
இருப்புக்கு அர்த்தம் தரும்
பெருமை மிகு வாழ்வாகும்.

**38. ஒட்டகங்கள்!**

ஒட்டகங்கள் நாங்கள். பாலையில் பயணிக்கும்
ஒட்டகங்கள் நாங்கள்.

நாளை என்ற பயணம் நாடி
வசந்தத்தை நாடித் தொடரும் பயணம்
எங்கள் பயணம். எங்கள் பயணம்.

துன்பப் புயற் காற்றுகள் வீசும்.
தேகங்கள் சீர் குலைந்து விடுவதில்லை.
உறுதி குலைந்து போவதும் இல்லை.

ஒட்டகங்கள் நாங்கள். பாலையில் பயணிக்கும்
ஒட்டகங்கள் நாங்கள்.

கானல் நீர் கண்டு கண்கள்
கலங்கி விட்ட போதும் கண்
பாவையின் ஒளி பூத்து விடுவதில்லை.

நம்பிக்கைக் கோல் பற்றித் தொடர்வோம்.
எண்ண ஒட்டகங்கள் மேல் பயணிப்போம்.
வசந்தம் நாடிப் பயணம் தொடரும்.

**39.** வாழ்க்கை எனும் சதுரங்கம்!

சதுரங்கம் என்பதொரு விளையாட்டு.
அதுபோல் வாழ்வுமொரு விளையாட்டே.

சதுரங்கத்தில் வெற்றி பெறுவதற்கே
சிந்தித்து நகர்தல் முக்கியமே.
மண்ணில் வெற்றி பெறுவதற்கே.
எண்ணி நகர்தல்; அவசியமே.

சதுரங்கம் என்பதொரு விளையாட்டு.
அதுபோல் வாழ்வுமிங்கே விளையாட்டே.

சதுரங்கம் என்பதொரு போர்க்களமே.
அதுபோல் வாழ்வுமொரு போர்க்களமே.
போர்க்களத்தில் வெற்றி பெறுவதற்கே
பொறுமை மிகவும் அவசியமே.

சதுரங்கம் என்பதொரு விளையாட்டு.
அதுபோல் வாழ்வுமிங்கே விளையாட்டே.

பொறுத்தார்  பூமி ஆள்வார்.
போர்க்களத்தில் பொறுத்தார் வெற்றியடைவார்.
சதுரங்கத்தில் சாதனை படைப்பார்.
எதுவந்தபோதும் எழுந்து வெல்வர்.

சதுரங்கம் என்பதொரு விளையாட்டு.
அதுபோல் வாழ்வுமொரு விளையாட்டே.

வாழ்க்கையை விளையாடி வெல்வோம்.
வெல்வதும், தோற்பதும் இயல்பே.
சதுரங்க வாழ்விலும் சகஜமே.
எதுவந்த போதும் வென்றிடுவோம்.

சதுரங்கம் என்பதொரு விளையாட்டு.
அதுபோல் வாழ்வுமொரு விளையாட்டே.

**40.** தர்க்கம் செய்வோம். ஞானம் பெறுவோம்.

தனிமைப் பொழுதுகளில் இனிமை காண்போம்.
தர்க்கம் செய்வோம். ஞானம் பெறுவோம்.

ஆகாயம் பார்த்து நிற்கும் பொழுதுகள்
ஆகர்சிப்பவை என்னை எப்போதும் எப்போதும்.
விரிவெளியில் என்னிருப்பு எவ்விதம் இவ்விதம்?
விடைநாடி வினாக்கள் எழும் பொழுதுகள்.

தனிமைப் பொழுதுகளில் இனிமை காண்போம்.
தர்க்கம் செய்வோம். ஞானம் பெறுவோம்.

இவ்விதப் பொழுதுகளை நான் விரும்புகின்றேன்.
இருப்பு பற்றிய கேள்விகளில் விருப்புண்டு.
சிந்திக்கத் தூண்டும் வினாக்கள் அல்லவா.
சிந்திப்பதில்தான் எத்துணை மகிழ்ச்சி.களிப்பு.

தனிமைப் பொழுதுகளில் இனிமை காண்போம்.
தர்க்கம் செய்வோம். ஞானம் பெறுவோம்.

சிந்திப்பது மானுடரின் தனி உடமை.
பேரண்டத்தின் பெருவெளியில் இருக்கக் கூடும்
நம்மைப் போல் சிந்திக்கும் வேறினம்.
நம்புகின்றேன் நானிதை எப்பொழுதும் உறுதியுடன்.

தனிமைப் பொழுதுகளில் இனிமை காண்போம்.
தர்க்கம் செய்வோம். ஞானம் பெறுவோம்.

கற்றல், சிந்தித்தல், எழுதுதல் , வாசித்தல்போல்
களிதரும் வேறொன்றும் இல்லை எனக்கு.
காலம் கழிவதும் தெரிவது இல்லை.
நானிவற்றில் மூழ்கிக் கிடக்கும் பொழுதுகளில்.

குமிழிபோல் வெளியில் விரையும் ஒரு கோளில்
அந்தரத்தில் ஓரிருப்பு எவ்விதம் இவ்விதம்
அவதரித்தது என்பது வியப்பு. பெருவியப்பு.
அண்டத்தின் இரகசியங்களை யார்தான் அறிவரோ?

தனிமைப் பொழுதுகளில் இனிமை காண்போம்.
தர்க்கம் செய்வோம். ஞானம் பெறுவோம்.

**41.** காலையின் வருகை.

காலைக் கதிரொளி கிழக்கில் தெரியும்.
நாளின் பிறப்பை நமக்கு எடுத்துரைக்கும்.

எங்கும் புத்துணர்ச்சி. எதிலும் புத்துணர்ச்சி.
பொங்கிப் பெருகும் புத்துணர்ச்சி எங்கும்.
காலையின் பண்பு புத்துணர்வு ஆகும்.
நாளைத் தொடங்குவதற்கு நல்கும் செயலாகும்.

காலைக் கதிரொளி கிழக்கில் தெரியும்.
நாளின் பிறப்பை நமக்கு எடுத்துரைக்கும்.

குருவிகள் வாழ்த்துப் பா இசைக்கும்.
குளங்களில் தாமரை இதழ் விரிக்கும்.
தண் கதிர் பரப்பும் கதிரின்
தண் அணைப்பில் உலகம் விழிக்கும்.

காலைக் கதிரொளி கிழக்கில் தெரியும்.
நாளின் பிறப்பை நமக்கு எடுத்துரைக்கும்.

இருள் நீங்கும் ஒளி பிறக்கும்
இருப்பில் இடர் நீங்கும். ஆம்!
இடர் நீங்கி களி பிறக்கும்.
இதுதான் காலை கூறும் அறிவுரை.

காலைக் கதிரொளி கிழக்கில் தெரியும்.
நாளின் பிறப்பை நமக்கு எடுத்துரைக்கும்.

வாழ்க்கையில் சவால் கண்டு தளராதீர்.
வளம் வரும்., நலம் மிகும்.
பகல் பிறப்பதும் அது போல்தான்.
பாரில் எங்கும் ஒளி பிறக்கும்.

காலைக் கதிரொளி கிழக்கில் தெரியும்.
நாளின் பிறப்பை நமக்கு எடுத்துரைக்கும்.

**42.** இயற்கையைப் பேணுவோம்.

இயற்கையை இரசிப்பேன் எப்பொழுதும் நான்
இயற்கையை இரசிப்பேன் எப்பொழுதும்.

விரிந்து கிடக்கிறது இயற்கை எங்கும்.
விரியும் அழகில் என்னை மறக்கின்றேன்.
விரிவான் என்னை எப்பொழுதும் மயக்கும்.
வியக்க வைக்கும் பசுமைமிகு வயல்கள்.

இயற்கையை இரசிப்பேன் எப்பொழுதும் நான்
இயற்கையை இரசிப்பேன் எப்பொழுதும்.

என்னை மறப்பதில் புத்துணர்வு ஊறுமே.
தன்னை மறப்பதில் பெருகுவதும் இன்பமே.
இருப்பைக் களிப்புடன் தொடர வைக்கும்
இயற்கையை எப்பொழுதும் விரும்புவேன் நான்.

இயற்கையை இரசிப்பேன் எப்பொழுதும் நான்
இயற்கையை இரசிப்பேன் எப்பொழுதும்.

உணர்வால் தாழ்ந்து கிடக்கும் சமயங்களில்
உற்சாகம் பெறுவதற்கு உதவுவது இயற்கை.
மனம் சோர்ந்து கிடக்கும் பொழுதுகளில்
மனச் சோர்வு அகற்றுவதும் இயற்கை.

இயற்கையை இரசிப்பேன் எப்பொழுதும் நான்
இயற்கையை இரசிப்பேன் எப்பொழுதும்.

இன்பத்தை வாழ்வுக்கு வழங்குவது இயற்கை.
இருப்புக்கு அர்த்தம் தருவதும் இயற்கை.
இயற்கையைப் பேணுவது நமது கடமை.
இயற்கையைப் பேணுவோம், வளம் சேர்ப்போம்.

இயற்கையை இரசிப்பேன் எப்பொழுதும் நான்
இயற்கையை இரசிப்பேன் எப்பொழுதும்.

**43.** கறுப்பு ஜூலை

கறுப்பு ஜூலையில் நான்
என் மண்ணை விட்டெ நீங்கினேன்.
என் மண்ணை விட்டு நீங்கினேன்.

கறுப்பு ஜூலை
நாகரிகத்தின் அவமானம்.
கறுப்பு ஜூலை
பேரழிவின் சின்னம்.
கறுப்பு ஜூலை
வரலாற்றின் களங்கம்.

அன்று
மனிதர் மிருகம் ஆகினர்.
மனிதர் மிருகம் ஆகினர்.
மனிதர் மிருகம் ஆகினர்.

சொந்தமண்ணில் அகதியானேன்.
சொந்த மண்ணில் அகதியானேன்.

பிறந்த மண்ணில் அகதியானேன்.
பிறந்த மண்ணில் அகதியானேன்.

புகலிடம் நாடிப் புறப்பட்டேன்.
புகுந்த மண்ணில் அகதியாக.

சிறைகளில் செந்நீர் வடிந்தது.
சிறைகளும் கசாப்புக் கடைகள் ஆகின.

போரொன்று வெடித்தது.
பெரு நாசம் விளைந்தது.

கறுப்பு ஜூலை பேரழிவின் சின்னம்.
கறுப்பு ஜூலை வரலாற்றின் களங்கம்.

கறுப்பு ஜூலைகள் இனியும் வேண்டாம்.
கறுப்பு ஜூலைகள் இனியும் வேண்டாம்.

கறுப்பு ஜூலையே போ.
கறுப்பு ஜூலையே போ.
கறுப்பு ஜூலையே போ.

## 44. நவீன விக்கிரமாதித்தனின் 'காலம்'!

எழுத்தாளர் மாலன் சாகித்திய அகாதெமிக்காக 'அயலகத் தமிழ்க் கவிதைகளின் தொகுப்பு -'புவி எங்கும் தமிழ்க் கவிதை' என்னும் கவிதைத்தொகுப்பினைத் தொகுத்துள்ளார். 22 நாடுகளில் வசிக்கும் தமிழ்க் கவிஞர்களின் 70 கவிதைகள் கொண்ட தொகுப்பு இது. மேற்படி தொகுப்பில் எனது இககவிதையான . "நவீன விக்கிரமாதித்தனின் 'காலம்'" கவிதையும் இடம் பெற்றுள்ளது.

உள்ளிருந்து எள்ளி நகைத்தது யார்?
ஒவ்வொரு முறையும் இவ்விதம்
நகைப்பதே உன் தொழிலாயிற்று.

விரிவெளியில் படர்ந்து கிடக்கும்
உன் நகைப்போ ,
நீ விளைவிக்கும் கோலங்களோ,
அல்லது உன் தந்திரம் மிக்க
கதையளப்போ
எனக்கொன்றும் புதியது அல்லவே.

இரவுவானின் அடுக்குகளில்
உனது சாகசம் மிக்க
நகைப்பினை உற்றுப் பார்த்திடும்
ஒவ்வொரு இரவிலும்,
நட்சத்திரச் சுடர்களில்,
அவற்றின் வலிமையில்
உன்னை உணர்கின்றேன்.

எப்பொழுதுமே இறுதி வெற்றி
உனக்குத்தான்.
எப்பொழுதுமே உன்காட்டில்
மழைதான்.
அதற்காக
மனந்தளர்வதென் பண்பல்ல.
ஆயின்
உன்னை வெற்றி கொள்ளுதலும் என்
பேரவாவன்று.பின்
உனைப் புரிதல்தான்.

ஓர் எல்லையினை
ஒளிச்சுடர் உனக்குத்
தந்துவிடும் பொருள் அறிந்த
எனக்கு
அவ் எல்லையினை மீறிடும்
ஆற்றலும், பக்குவமும்
உண்டு; புரியுமா?

வெளியும், கதியும், ஈர்ப்பும்
உன்னை, உன் இருப்பினை
நிர்ணயித்து விடுகையில்
சுயாதீனத்துடன்
பீற்றித் திரிவதாக உணரும்
உன் சுயாதீனமற்ற,
இறுமாப்புக்கு
அர்த்தமேதுமுண்டா?

இடம்,
வலம் ,
மேல்,
கீழ்.
இருதிசை, நோக்கு கொண்ட
பரிமாணங்களில் இதுவரையில்
நீ
ஒருதிசையினைத் தானே காட்டி
புதிருடன் விளங்குகின்றாய்?

உன் புதிரவிழ்த்துன்
மறுபக்கத்தைக் காட்டுதலெப்போ?

இரவி ,
இச் சுடர் இவையெலாம்
ஓய்வாயிருத்தலுண்டோ? பின்
நான் மட்டுமேன்?

நீ எத்தனை முறைதான்
உள்ளிருந்து
எள்ளி நகைத்தாலும்
மீண்டும் மீண்டும்
முயன்று கொண்டேயிருப்பேன்.

நீ
போடும் புதிர்களுக்கு
விளக்கம் காணுதற்கு
முயன்று கொண்டேயிருப்பேன்.

வேதாளங்களின் உள்ளிருந்து
எள்ளி நகைத்தல் கண்டும்
முயற்சியில்
முற்றுந் தளராதவன் விக்கிரமாதித்தன்
மட்டும்தானா?

### 45. அதி மானுடரே! நீர் எங்கு போயொளிந்தீர்?

இக்கவிதை தாயகம் (கனடா) பத்திரிகை, பதிவுகள், திண்ணை இணைய இதழ்களில் வெளியான கவிதை. எண்பதுகளில் என் குறிப்பேட்டில் நான் எழுதி வைத்திருந்த கவிதைகளில் ஒன்று. கனடாவில் மங்கை பதிப்பக வெளியீடாக வெளிவந்த 'எழுக அதிமானுடா' என்னும் எனது முதலாவது கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைகளில் ஒன்று.

‘கொங்ரீட்’! ‘கொங்ரீட்’!’ கொங்ரீட்’!
சுவர்கள்! கதிருறிஞ்சிக் கனலுதிர்த்திடுங்
கள்ளங்கரவற்ற வெண்பரப்புகள்.

'சீமெந்து' சிரிக்கும் நடைபாதைகள்.

அஞ்சா நெஞ்சத் தூண்களின்
அரவணைப்பில் மயங்கிக்
கிடக்கும் இட வெளிகள்.

வாயுப் படைகளின் வடிகட்டலில்
வடியுமுஷ்ணக் கதிர்கள்.
பனித் துளிகளின் குமிண் சிரிப்பினில்
சிலிர்த்திடும்
புல்வெளிகள் பற்றிய கற்பனைகளின்
இனிமையில், நீலப்படுதாவின் கீழ்
குளிர்ந்து கிடக்கும் நிலமடந்தை
பற்றிய சோக நினைவுகள்.

தலைகவிழ்ந்து அரவணைக்கும்
விருட்ஷக் கன்னியர்தம் மென்தழுவல்
ஸ்பரிசக் கனவுகள்.

செயற்கையின தாக்கங்கள்
படர்ந்திட்ட
இயற்கையின் தேக்கங்கள்.

மரங்களில் புல்வெளிகளில் மந்தைகளாகக்
குழுக்களாகக் குகைகளில்
நடுங்கடிக்குமிருண்ட இராவினில்
நடுங்கி மின்னிடுமொளியினில்
மருண்டு கொட்டிடும் மழையினுள்
சுருண்டு
புரியாத பொழுதுகளில்
பதுங்கிக் குடங்கித் தொடர்ந்திட்ட
ஆதிப்பயணங்கள்.

இயற்கையின் தாக்கத்தினுள்
சுழன்றிட்ட வட்டங்களில்
மயங்கிக் கிடந்திட்ட வாழ்வு
வட்டங்கள்.

ஆ....அந்த அமைதி! அந்த இனிமை!
எங்கே ? எங்கே ? அவையெல்லாம்
எங்கே ? ஐயோ..அவையெல்லாம்
எங்கே போய் அடியோடு தொலைந்தனவோ ?
பொறி கக்கும் புகையினில் சுவாசம் முட்டி
புகைந்திட்ட வர்க்கப் போர்களால்
நிலைகுலையும் ககனத்தில்
குண்டுகளின் தாண்டவம்.

அச்சமின்றிப் பறந்த ஆருயிர் நண்பர்களே!
நகை தவள நீந்திச் சுகித்த என்னருமைத் தோழர்களே!
தென்றலணைப்பில் தூங்கிக் கிடந்திட்ட
விருட்சத்துக் குழந்தைகளே!
ஆறறிவால் நிலைகுலைந்து
நிற்கும் பிரிய சிநேகிதர்களே!
வளர்ச்சி தந்த வளர்ச்சியிலோ... ?

விரக்தி! அமைதியின்மை! ஆங்காரம்!
போர்! போர்!போர்!
போரென்றால்..போர்!போர்!போர்!

ஆ....

வளர்ச்சியில் விட்ட வழுதானென்ன ?
வளர்ச்சியில் விட்ட வழுதானென்ன ?
வளர்ச்சியில் விட்ட வழுதானென்ன ?
வழுதானென்ன ? வழுதானென்ன ?
வழுதானென்ன ?

ஆ..அந்த

அமைதி!அமைதி!அமைதி!
அன்பு!அன்பு!அன்பு!
இனிமை!இனிமை!இனிமை!
அதி மானுடரே!
எங்கு போயொளிந்தீர்?
நீர்! எங்கு போயொளிந்தீர்?
நீர்! எங்கு போயொளிந்தீர்?

**46.** எங்கோயிருக்கும் ஒரு கிரகவாசிக்கு

நான் பிரபஞ்சத்தில் அல்லது பிரபஞ்சங்களில் எம்மையொத்த, கீழான அல்லது மேலான உயிர்கள் இருக்கும் என்பதைத் திடமாக நம்புபவன். அவற்றின் பரிமாணங்கள் எம்மைப்போல் முப்பரிமாணங்களுக்குள் அகப்பட்டவையாக இருக்கத்தேவையில்லை என்பதையும் நம்புகின்றேன். அவை நாம் உருவாக்கப்பட்ட இரசாயனப்பொருட்கள் மூலம் உருவாகியிருக்க வேண்டிய அவசியமும் இல்லையென்பதையும் திடமாக நம்புபவன்.

'எங்கோயிருக்கும் ஒரு கிரகவாசிக்கு' என்னுமிக் கவிதை எண்பதுகளின் ஆரம்பத்தில் என் குறிப்பேடொன்றில் முதன் முதலில் எழுதப்பட்டது. கனடாவிலிருந்து வெளியான தாயகம் பத்திரிகையில் வெளியானது. பின்னர் எனது கவிதைத்தொகுதிகளான எழுக அதிமானுடா, ஒரு நகரத்து மனிதனின் புலம்பல் ஆகிய தொகுப்புகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

முகமில்லாத மனிதர்களிற்காகவும்
விழியில்லாத உருவங்களிற்காகவும்
கவிதைத் தூது விடுப்பர். ஆயின், யான்
அவர்களிற்கல்ல நண்பா! உனக்குத்தான்
அனுப்புகின்றேனிச் செய்திதனை.
உன்னை நான் பார்த்ததில்லை.
பார்க்கப் போவதுமில்லை.
உனக்கும் எனக்குமிடையிலோ
ஒளியாண்டுச் தடைச்சுவர்கள்.
‘காலத்தின் மாய ‘ வேடங்கள்.
ஆயின் நான் மனந்தளர்ந்திடவில்லை.
மனந்தளர்ந்திடவில்லை.
மனந்தளர்ந்திடவில்லை.
நிச்சயமாய் நானுனை நம்புகின்றேன். எங்கேனுமோரிடத்தில்
நீ நிச்சயம் வாழ்ந்துகொண்டு தானிருக்கின்றாய். ஆம்!
வாழ்ந்துகொண்டு தானிருக்கின்றாய்.
காடுகளில் , குகைகளில் அல்லது கூதற்குளிர்படர்வரைகளில்
உன்
காலத்தின் முதற்படியில்…
அல்லது
விண்வெளியில் கொக்கரித்து
வீங்கிக் கிடக்கும் மமதையிலே..

சிலவேளை
போர்களினாலுந்தன் பூதலந்தனைப்
பொசுக்கிச் சிதைத்தபடி அறியாமையில்…

ஒருவேளை
அதியுயர் மனத்தன்மை பெற்றதொரு

அற்புதவுயிராய்…

ஆயினும் உன்னிடம் நான்
அறிய விரும்புவது ஒன்றினையே..
‘புரியாத புதிர்தனைப் புரிந்தவனாய்
நீயிருப்பின்
பகர்ந்திடு.

காலத்தை நீ வென்றனையோ ?
அவ்வாறெனின்
அதையெனக்குப் பகர்ந்திடு.
பின் நீயே
நம்மவரின் கடவுள்.
காலத்தை கடந்தவர் தேவர், கடவுளென்பர்
நம்மவர்.

இன்னுமொன்று கேட்பேன்.
இயலுமென்றா லியம்பிடு.
இவ்வாழ்வில் அர்த்தமுண்டோ ?
இதனை நீ அறிந்தனையோ ?
உண்டெனில் அர்த்தம் தானென்ன ?

சிலர்
அர்த்தமற்ற வாழ்வென்பர்.
யான்
அவ்வாறல்லன்.

அர்த்தம்தனை நம்புபவன். ஆயினும்
அதனையிதுவரை அறிந்திலேன்.
அதனை நீ அறிந்திடின்
அதனையிங்கு விளக்கிடு.

அது போதும்!

அது போதும்!

**47.** காலவெளிச்சித்தனின் மடலொன்று**!**

ஒளிக்கூம்புக்குள்
விரிந்து ,
சுருங்கி,
மீண்டும் விரிந்து
கிடக்குமென் அண்டம்.

அடியே! அண்டத்தில்
நீ இங்கெங்கு சென்றிடினும்
உன்னால் ஒருபோதுமே என்னிடமிருந்து
மறைந்துவிடவே முடியாதடி.

ஏனென்று கேட்கின்றாயா?
நீயே அறிந்துகொள்
நீயே புரிந்துகொள்
என்று நானுனக்குக்கூறிடப் போவதில்லை.
உன் சிந்திக்குமறிவுக்கும் வேலை
வைக்கப்போவதில்லை.

நானே  கூறுகின்றேன் விளக்கம் கண்ணம்மா!
உன்னால் புரிந்துகொண்டிட முடிந்தால்
புரிந்துகொள்.
ஏனென்றால்
இப்பிரபஞ்சத்துடனான என் உறவு
ஏன் உன் உறவும் கூடத்தான்
ஒருபோதுமே பிரிக்கப்பட முடியாதடீ.

இருந்தாலும் கவலையை விடு.
இன்னும் சிறிது விளக்குவேன்.
நீ, நான் , இங்குள்ள அனைத்துமே
துகள்களின் நாட்டியம்தாம்.
சக்தியின் வடிவம்தான்.
புரிந்ததா சகியே!

இன்னுமொன்று இயம்புவேன் கேள்.
இங்கிருந்து எத்தொலைவும்
ஏன் இட-வெளி மீறிப்
பயணிக்கும் காலவெளிச்சித்தன் நான்.

முடியுமா? சாத்தியமா? என்று நீ
கேட்கலாம்.
இல்லை
கேட்பதென் காதுகளில்

விழுகின்றது.

'அறிவுணர்வு' வாகனமென்னிடமுள்ளதே.
ஏன் உன்னிடமுமுள்ளதே.
ஏன் அவர்கள் எல்லாரிடமும் உள்ளதே.
அதன் மூலம். ஆம்! அதன் மூலம்
என்னால் இட-வெளியை மட்டுமல்ல
அதற்கப்பாலும் பயணிக்க முடியும்.

அதனால்தான் கூறினேன் 'உன்னால்
எங்கு சென்றிடும்
என்னாலும் அங்கு வரமுடியுமென்று;.
நீ எஙகே! அடி கண்ணம்மா
நானும் அங்கே!

என் வெளியில் நானிருக்கின்றேன்.
என் வெளியில் நீயும் இருக்கின்றாய்.
உன் வெளியில் நீ இருக்கின்றாய்.
உன் வெளியில் நானும் இருக்கின்றேன்.
என் வெளியில் அவர்களும் இருக்கின்றார்கள்.
அவர்கள் வெளிகளில் நாமும் இருக்கின்றோம்.

நீயிருப்பதும், அவர்கள் இருப்பதும்
என் வெளியில் என்றால்
எப்படி நீயும் அவர்களும்
சுயாதீனமாக இருக்க முடியும்

என்னை மீறி.
உன் நிலையும் அதுதானே.
உன்னை மீறி
அவர்களை மீறி,
நானெப்படி இங்கிருக்க முடியும்?

கண்ணம்மா புரிந்ததா? விடை தெரிந்ததா?

என்னை மீறி நீயில்லை.
இவ்வுலகில்லை.
இங்கு எதுவுமேயில்லை.
அதனால் பிரிவுமில்லை.
பிரிவற்ற உறவினில்
அறிவு மிகுந்து பிரகாசிக்கின்றேன்.
'அறிவுணர்'வால் சுடர்விடுகின்றேன்.
கண்ணம்மா! 'அறிவுணர்'வால் சுடர்விடுகின்றேன்.

**48. ஆசை!**

அர்த்த ராத்திரியில்
அண்ணாந்து ஆகாயம்
பார்ப்பேன். அகமிழப்பேன்.
பாவை இவள் வழக்கமாகும்.

கருமைகளில் வெளிகளில்
கண் சிமிட்டும் சுடர்ப் பெண்கள்
பேரழகில் மனதொன்றிப்
பித்துப் பிடித்துக் கிடந்திடுவேன்.

நத்துக்கள் கத்திவிடும்
நள்ளிரவில் எனை மறந்தே
சித்தம் மறப்பேன்.
சொக்கி இருப்பேன்.

பரந்துவரும் அமைதியிலே
பரவி வரும் பல்லிகளின்
மெல்லொலிகள் கேட்பேன்.
பைத்தியமாய்ப் படுத்திருப்பேன்.

இயற்கையின் பேரழகில்
இதயம் பறிகொடுப்பேன்.
இவ்விதம் இருப்பதென்றால்
இவளின் இஷ்டடமாகும்.

**49.** தாயே!

தாயே! என்னிருப்பில்
உன்னிருப்பறிந்தேன்!
உன்னிருப்பாலிருப்பின் மறுப்புதனை
உணர்த்தியெங்கு சென்றாய் ? தாயே!
எங்கு சென்றாய் ?

நினைவுக் கோளத்தினொரு
சித்தவிளையாட்டாய்
இருந்து நீ சென்றதெல்லாம்
அன்னையே! என்
எண்ணப் பறவைகளின் வெறும்
சிறகடிப்போ ?

இருந்தவிருப்பை
இதுவரை நான் இவ்விதம்
உணர்ந்தேனா ?

இருப்புணர்ந்து
புரிவதற்கு உன்னிருப்பேயொரு
காரணியாயமைந்த விந்தையென்னே!

உன்னிழல் தொடர்ந்து வரும்
குஞ்சுகளாய் வருமெமையரவணைத்தாய்.
காத்து நின்றாய்.

உணர்வெல்லாம் காற்றாக நீ போனதினால்
நனவாய்க் கனவாய் வந்து வந்து
மோதும் செயலென்னே!

என்றேனும் உனைப்பற்றி நீ எண்ணியதுண்டா ?
நாம் நன்றாயிருந்தாலது போதுமென
உன்பணிசெய்து கிடந்தாயே ?

தாயே!உனை நாமெங்கினிக் காண்போமோ ?

இங்கு நீ இருந்ததெல்லாம்,
இங்கு நீ நடந்ததெல்லாம்,
இங்கு நாம் திரிந்ததெல்லாம்
இருந்ததொரு இருப்போ ?

விரியும் வினாக்கள் விடைநாடிச்
சிறகடிக்கும் சிட்டுக்களாய்

சித்தவானினிலே.
விடை தெரியா விடைநாடும்
வினாக்கள் பல சுமந்து
ஒட்டகமாயிப் பாலையிலே
காலையும் மாலையுமாய்
பயணமின்னும் தொடருமோ ?

பயணத்தின் ஒளித்தெறிப்பெல்லாம்
கானற் காட்சியாய் கடந்ததுவோ ?
பாலையும் கானலோ ?
இப்பயணமும் கானலோ ?
இங்கு இப் பயணமும்
கானலோ ?

நெஞ்சிலுரமூட்டியெமை வளர்த்தாய் தாயே!
அஞ்சிடாதுளம் தந்தெமை வார்த்தாய்.

நீ இருந்ததெல்லாம் தாயே! வெறும் நிழலா ?
நீ இருந்ததெல்லாம் தாயே! வெறுங் கனவா ?
உன்னிருப்புமென்னிருப்பால் விளைந்ததொரு
பொய்யானதொரு மெய்யோ ? தாயே!
பொய்யானதொரு மெய்யோ ?

உனது சொல்லும் செயலும்
உணர்வும் பரிவும்
பரவிக்கிடக்கும் வெளிக்குள்
வெளியாய் பரவிக் கலந்தாய்.

மீண்டுமொருமுறை
'நான் ' 'ஏன் ' 'யார் ' என
ஆய்ந்திட வைத்துச் சென்றாய் ?

தாயே!
ஆயினுன் உயிரின் உறவின்
உதிரத் துளியாய் இன்னுமிங்கே
இருக்குமென் இருப்பில் நான்
உனைக் கண்டு தெளிவேன். அதனால்
உனைப் புரிந்தேனிந்த
உலகை அறிந்தேன். ஏன்
எனையும் தெரிந்தேன். என்
இருப்பில் இருந்த
உன்
இருப்பின் பொருள் உணர்ந்தேன்.
தாயே! பொருள் கண்டேன்.

**50.** நட்சத்திரத் தோழியரே அவனை அழைத்து வாருங்கள்!

படுக்கையில் புரண்டு கிடக்கின்றேன்.
விரிவானத்து நட்சத்திரத் தோழியரே.
தூக்கமின்றித்  தவிக்கின்றேன்.
என்னவன் நினைவாலே.
என்னவன் நினைவாலே.

நீள்விழியாள் என்றெனை அழைத்தான்.
நிம்மதியாய் இரு என்றான்.
நீயின்றி நானில்லை என்றான்.
சொன்னவன் இன்று இங்கில்லை.
நெடுந் தொலைவு சென்று விட்டான்.

எங்கு சென்றான் நானறியேன்.
எந்த நாட்டில்,
எந்தக் காட்டில்
எந்த ஊரில்
தவிக்கின்றானோ நானறியேன்.

நட்சத்திரத் தோழியரே.
நட்சத்திரத் தோழியரே.
உலகு முழுவதும்
உங்களால் பார்க்க முடியும்.
முடிந்தால் தேடிப் பாருங்கள்.
மேற்கு நோக்கிச் சென்றவனை
முடிந்தால் தேடிப் பாருங்கள்.

இருப்பதே போதுமென்றேன்.
இங்கிருந்தே வாழ்வோமென்றேன்.
அங்கிருந்து உழைப்பது மேலென்றே
அவன் எனைப் பிரிந்தான்.
பிரிந்தவன் பிரிந்தவனே தோழியரே,
பிரிந்தவனிடமிருந்து இன்றுவரை
பதில் ஏதுமில்லை.
பதைபதைத்துக் கிடக்கின்றேன்.
தோழியரே,
பதைபதைத்துக் கிடக்கின்றேன்.
எங்கு சென்றான் அவன்.
என்ன ஆனான் அவன்.

நட்சத்திரத் தோழியரே.
நான் தவிப்பதை
நவிலுங்கள் அவனிடம்.

அவனில்லாத வாழ்வில்
இவளுக்கு இனிமையில்லை என்று
அவனுக்குச் சொல்லுங்கள்.

பொருள் தேடிப் போனவனைப்
பார்த்தால் பகருங்கள்.
பெண்ணிவளின் நிலையைப்
பகருங்கள்.

அவனருகில் நானிருந்தால்
அது போதும் என்று
அவனிடம் கூறுங்கள்.
அவசரமாக வரும்படி கூறுங்கள்.
நட்சத்திரத் தோழியரே.
நட்சத்திரத் தோழியரே.
நங்கை இவள் நிலையினை
எடுத்துக் கூறுங்கள்.
என்னிடம் இரக்கம் காட்ட
எடுத்துக் கூறுங்கள்.

அவனற்ற இருப்பில்
அழகில்லை. அமைதியில்லை.
இனிமையில்லை.
எதுவுமில்லை.
வெறுமை சூழ் வாழ்வென்று
வழியில் கண்டால் கூறுங்கள்.
நட்சத்திரத் தோழியரே. கூறுங்கள்.
நட்சத்திரத் தோழியரே.

இங்கு வயலுண்டு,.
இங்கு குளமுண்டு.
இங்கு வளம் உண்டு.,
இங்கு வனம் உண்டு.
இருப்புக்குப் பொருள் பெருக்க
இங்கு எல்லாம் உண்டு.
அவனிடம் கூறுங்கள். கூறி
அவனை அழைத்து வாருங்கள்.
அவன் அருகில் இருந்தால்
அது போதும்.
அது போதும்.
அது போதும்.

**51.** **யாழ்ப்பாணத்து மொக்கங் கடை!**

மனத்தில்  தெரிகிறது.
மொக்கங் கடை
யாழ்ப்பாணத்தின்
மொக்கங் கடை

மறக்க முடியாத மொக்கங் கடை.
மறக்க முடியாத மொக்கங் கடை.
யாழ்ப்பாணமண்ணின்
மொக்கங் கடை.

கொத்து ரொட்டியென்றால்
எமக்கு
மொக்கங் கடை தானே.

மொக்கன் கடை என்றே
மக்கள் அழைப்பர்.
எனக்கோ அது என்றுமே
மொக்கங் கடை.

மொக்கங் கடை என்றே
முகப்பு விளம்பரத்தில்
பார்த்த நினைவு.

நினைவு பொய்யோ
நினைவு மெய்யோ
நிலைத்து விட்டது
நினைவில் மொக்கங் கடை
என்றே.
என் நினைவில்
மொக்கங் கடை
என்றே.

யாழ்ப்பாண ஐந்து சந்திக்கு
அண்மையில் ஒரு தெரு.
அங்கு அமைந்திருந்தது
அந்த மொக்கங் கடை.

நண்பருடன் றீகலில்
நான்ஆங்கிலப் படம்
பார்க்கும் சமயங்களில்
போக மறப்பதில்லை
மொக்கங் கடைக்கு.

மொக்கங் கடையென்றால்
முதலில் மனத்தில்
மலர்வது கொத்துரொட்டியே.

கொத்துரொட்டியை நான்
அறிந்தது அங்குதான்.
அறிந்தது அங்குதான்.

மறக்க முடியாத மொக்கங் கடை.
மறக்க முடியாத மொக்கங் கடை.
யாழ்ப்பாண மண்ணின்
மொக்கங் கடை.

மண்ணில் நாம் முஸ்லிம்
மக்களுடன் இணைந்து வாழ்ந்த
காலத்தின் ஒரு குறியீடு
மொக்கங் கடை.

மறக்க முடியாத மொக்கங் கடை.
மறக்க முடியாத மொக்கங் கடை.
யாழ்ப்பாண மண்ணின்
மொக்கங் கடை.

மொக்கங் கடை என்றால்
மனத்தில் சிறகடிக்கும்
சிந்தனைக் குருவிகள்.

மறக்க முடியாத மொக்கங் கடை.
மறக்க முடியாத மொக்கங் கடை.
யாழ்ப்பாணமண்ணின்
மொக்கங் கடை.

**52.** மேப்பிள் மண்ணின் மைந்தர்கள்!

இக்கவிதை எனது முதலாவது கவிதைத்தொகுப்பான , மங்கை பதிப்பக வெளியீடாக  கனடாவில் வெளியான 'எழுக அதிமானுடா' தொகுப்பில் உள்ளது.

பனிமழை பொழிந்து,
பாதையெல்லாம் ஒரே சறுக்கல்.
ஸிரோ உடலைக்
குற்றியபடி ஒரே
குதியாட்டம்.

“டொரண்டோ’ மாநகரின்
அழகானதோர் அவென்யு
யூனிவர்சிட்டி அவென்யு.
அகன்ற சாலை,
அதன் நடுவே
அழகான் சிலைகள்,
நீரூற்றுகள்,  மரங்கள்..

இருபுறமும் உயர்ந்து
இலங்கும் கட்டடப்பரப்புகள்.

சிலையொன்றின்
அடிப்புறத்தே...ஆதிமனிதர்கள்
சிலரை நீங்கள்
சந்திக்கலாம்.

ஆண், பெண் பேதமின்றி
அணைத்தபடி ஒருவரையொருவர் ஒன்றாக
அணைத்தபடி
கந்தலுடன் தழுவலின் கணச்சூட்டில்
தம்மை மெய்ம்மறந்தபடி..இருப்பார்கள்.
யாரிவர்கள்?
யாரிவர்கள்?

நகரில் திரியும்
நாடோடிகளா?

இவர்களுக்கு வீடு,
இவர்களுக்கு வாசல்,
இவர்களுக்குக் குடும்பம்,
இவர்களுக்குக் குழந்தை
என்று எதுவுமேயில்லையா?
யாரிவர்கள்?

இவர்கள் நாடிழந்தவர்கள்.
இருந்த மண்ணிழந்தவர்கள்.

இவர்களுக்கென்றொரு கலை,
இவர்களுக்கென்றோரு கலாச்சாரம்,
இவர்களுக்கென்றொரு பண்பாடு,
இவர்களுக்கென்றோரு நாகரிகம்,
எல்லாமேயிருந்தன ஒரு காலத்தில்.

அன்று
கொடிகட்டிப்பறந்தவர்கள்
இன்று
இடிபட்டுச்சிறுப்பவர்கள்.
இவர்கள்தாம்
இந்நாட்டின், இம்மண்ணின்
உண்மையான மைந்தர்கள்.

இவர்களது
உணர்வுகள் மதிக்கப்படாவிட்டால்,
இவர்களது
உரிமைகள் கொடுக்கப்படாவிட்டால்,
இன்று இழந்தவர்கள்!
நாளை எழுந்தவர்கள்.

மேப்பிள் மண்ணின் உண்மை
மைந்தர்கள் இவர்கள்தாம்.
ஆம்.
இவர்கள்தாம்.

**53.** காலவெளிப்பயணியின் நெடும் பயணம்

'ஓவியா பதிப்பக' உரிமையாளரும், எழுத்தாளருமான வதிலைப்பிரபா அவர்கள் வெளியிட்டு வரும் 'மகாகவி' சஞ்சிகையின் 'திசம்பர்' 2017 பன்னாட்டிதற் சிறப்பிதழில் வெளியான எனது கவிதை.-

என் வெப்ப மண்ணை,
மேல் விரியும்
இரவுவானை,
சுடரை, நிலவை
நான் நீங்கியது
நேற்றுத்தான் போல்
நினைவில் நிற்கிறது.

இன்று நிழலமர்ந்து
நினைவு அசை போடுமொரு
மாடுமாகினேன்.

ஒட்டகமாய், மாடாய்,
நள்யாமத்து நத்தாய்,
சுமைமிகு அத்திரியாய்,
உறுமீன் தேடி
வாடி நிற்குமொரு கொக்காய்,
இரைக்காய்ப் பொறுமைமிகு
முதலையாய்,
துருவத்துக் கட்டடக்காட்டுக்
கான் உயிருமாகினேன்.

முடிவற்ற நெடும் பயணம்!

தங்குதற்கும், ஆறுதற்கும்
தருணங்களற்ற நெடும் பயணம்!

என்று முடியும்? எங்கு முடியும்?

நம்பிக்கையினை
நானின்னும் இழக்கவில்லை.

வழிச்சோலைகள், நீர்நிலைகள்
துருவப்பாலை வசங்கள் ஆயின..
பேய்த்தேர் எனவே போயின.
இருந்தும் சிந்தையின்னும்
இழக்கவில்லை நான்.

காலவெளிக் குழந்தை நான்
கண்ட கனவுகள்
நனவிடைதோய்தற் துளிகளாயின.
துருவப்பாலை ஒட்டகம் நான்.
இன்றோ சுடர் தேடுமொரு
துருவத்துப் பரதேசி!

அந்தமிலாவிருப்பு
நம்பிக்கைக் கனவுகள்
மிகப்பயணிக்குமொரு
காலவெளிப்பயணி
நான். பயணிக்கின்றேன்.
பயணிக்கின்றேன். பயணிக்கின்றேன்

**54.** நாற்பரிமாண ஓவியத்தை இங்கு வரைந்தவர் யார் கண்ணா!

எனது பதிவுகள்.காம் வெளியீடாக வெளியான 'ஒரு நகரத்து மனிதனின் புலம்பல்' கவிதைத் தொகுப்பிலும் உள்ளடங்கியுள்ள கண்ணம்மாப் பாடல்களில் ஒன்றினைக் கண்ணம்மா பாடினால் எப்படியிருக்கும் என்னும் கற்பனையில் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளேன்.

விரியும் பெரு வெளி!
நாற்பரிமாண ஓவியத்தை இங்கு
வரைந்தவர் யார்
கண்ணா?
சொல் கண்ணா?
சொல் கண்ணா?

மேற்பரிமாண ஓவியங்கள்
மேலுமுண்டா
கண்ணா?
சொல் கண்ணா?
சொல் கண்ணா?

பற்பலப் பரிமாண ஓவியங்கள்
பல இருப்பின் கண்ணா
சமாந்தர ஓவியங்களுக்குள்
செல்லும் வழிகள்தாமுண்டா
கண்ணா?
பயணிப்பதற்கு வழிகள்தாமுண்டா
கண்ணா?
சொல் கண்ணா?
சொல் கண்ணா?

பெருவெளியின் விரிதல்போலென்
சிந்தை விரிவெளிதன் விரிதலில்
முகிழ்க்கும் வினாக்கள் கண்ணா?
உன்னால் அறிந்திட முடிகின்றதா
கண்ணா?
சொல் கண்ணா?
சொல் கண்ணா?

இவ்விதம் இருப்பதில்,
இவ்விதமெண்ணி
இருப்பதிலுள்ள சுகம் நீ அறிவாய்தானே
கண்ணா?
சொல் கண்ணா?
சொல் கண்ணா?

கண்ணா!
இவற்றை
இங்கெழுப்பியது முதலில் நீதானே
கண்ணா?
சொல் கண்ணா?
சொல் கண்ணா?

உன் புரிதல் வேறு.
என் புரிதல் வேறு.
ஆயினும்
அவை நாணயமொன்றின்
பக்கங்கள்தாமே
கண்ணா?
சொல் கண்ணா?
சொல் கண்ணா?

எனக்கும் தெரியும்,
உனக்கும் புரியும்
அது எதுவென்று.
எது அது? அது
ஓவியத்துக்
காட்சிக் கூறுகள் நாமென்பது.
அதுதான் அது.
ஓவியத்துக் கூறுகள் நாம்
இல்லையா
கண்ணா?
சொல் கண்ணா?
சொல் கண்ணா?

ஓடுவதற்கு ஓரிடமுண்டா கண்ணா?
ஒளிவதற்கு ஓரிடமுண்டா கண்ணா?
ஓவியத்தெல்லைகளை
ஓடிக் கடப்பதற்கு
ஓரிடமுண்டா
கண்ணா?
சொல் கண்ணா?
சொல் கண்ணா?

**55.** வான் பார்க்கும் யாழ் மண்ணின் வழுக்கியாறு!

அராலிப் பாலத்தின்
அடியில்
காக்கைதீவுக் கடலுடன்
கலக்கிறது
வழுக்கையாறு.
வழுக்கியாறு.

வான் பார்க்கும் யாழ் மண்ணே.
வளம் சேர்க்கும் வழுக்கியாற்றால்
வரலாற்றுப் பெருமை உற்றாய்.
வரலாற்றுப் பெருமை உற்றாய்.

வழுக்கியாறுக்கு ஒரு
வரலாறுண்டு.
அது
தமிழர் தம் வரலாறு.
தமிழர் தம் வரலாறு.
ஆம்! தமிழர்தம் வரலாறு..

தெல்லிப்பளை, அளவெட்டி,
சங்கானை, நவாலி,
வழி வந்து அராலிக்
காக்கைதீவுக் கடலில்
கலக்கும் ஆறு
வழுக்கியாறு
வழுக்கையாறு.

கந்தரோடை கதிரைமலையாகக்
கோலோச்சிய காலம்.
அன்று
கோலோச்சிய ஆறு
வழுக்கியாறு.
அன்று
வழுக்கியாறு பேராறு.
வர்த்தகப் படகுகள் பாய்
விரிக்கும் பேராறு.

நாவாய்கள் வந்தடையும்
நாவாந்துறை!
சங்கடம் தோணிகள்
கதிரைமலை நாடிப்
பொருள் ஏற்றிச் செல்லும்.

படகுகள் செல்லும்
பேராறு வழுக்கியாறு.
படகுகள் செல்லும்
பேராறு வழுக்கியாறு.

சங்கடம் தோணிகள்
நாவாந்துறையிலிருந்து
பயணித்தன.
பயணித்ததால்
சங்கட நாவாந்துறை என்பார்
சரித்திர ஆய்வாளர் ராசநாயகம்.

வழுக்கியாறு
வரலாற்றுப் பெருமை மிகு
வழுக்கையாறு

கதிரைமலை ராஜதானி
காட்சிகள் விரியும்..
வியக்க வைக்கும்.
வரலாற்றை
விளம்பி நிற்கும்.

வழுக்கியாறு
வரலாற்றுப் பெருமை மிகு
வழுக்கையாறு

வரலாற்றில் தெளிவில்லை.
வழுக்கியாறு தெளிவு தரும்.
வரலாற்றுப் பெருமைகளை
அறிய வைக்கும்.
ஆம். அறிய வைக்கும்
ஆவணம் வழுக்கியாறு.

**56 ஒளி வீசி ஓய்வோம்.**

கார் இருளில் பேரிடி.
ஊளையிடும் கடுங் காற்று.
கடுகி மறையும் ஒளி மின்னல்.
வானக்குளம் உடைந்து
பெய்யும் பெருமழை.
பேய் மழை.

சட்டச்சடக்க
ஓட்டுக் கூரையில்
மழைத் தாரை.

கட்டிலில் படுத்திருக்கின்றேன்.
கருமையில் விரிவான் தெரிகிறது.

கணநேரக் குறு வாழ்வில்
ஒளி வீசும் மின்னல்.
வாழும் சிறு கணத்தில்
வையமெல்லாம் ஒளிதரும் மின்னல்.

கவீந்திரனின் கவிதை
'சிந்தனையும் மின்னொளியும்'
சிந்தையில் சிறகடிக்கிறது.
சிந்தனைக் குருவி பறக்கின்றது.

இருக்கும் சிறு வாழ்வில் நாம்
இயன்றவரை
மின்னலாக மின்னி
மறைவோம்.
ஒளி தந்து
ஓய்வோம்.

ஒரு கணமென்றாலும்
ஒளி வீசிச் சாய்வோம்
ஒரு கணமென்றாலும்
ஒளி வீசி மாய்வோம்.
ஒரு கணமென்றாலும்
ஒளி வீசி ஓய்வோம்.

பெரு மழை. பேய் மழை.
பெய்து கொண்டு தானிருக்கிறது.
இது ஓயப் போவதில்லை.
ஓயாது பெய்யத்தான் போகிறது.

வயற்புறத் தவளைகளின்
வாய்ப்பாட்டுக் கச்சேரி
காற்றினூடு பொசிகின்றது.
ஊற்றென இன்பம் ஊறுகின்றது.
விடியும் வரை ஓயப்போவதில்லை
வாய்ப்பாட்டு. தவளைகளின்
வாய்ப்பாட்டு.

ஒரு கணமென்றாலும்
ஒளி வீசிச் சாய்வோம்
ஒரு கணமென்றாலும்
ஒளி வீசி மாய்வோம்.
ஒரு கணமென்றாலும்
ஒளி வீசி ஓய்வோம்.

**57.** தனிமைச் சாம்ராஜ்யத்துச் சுதந்திரப் பறவை!

தனிமைகளின் சாம்ராஜ்யங்களில்
கட்டுண்டு கிடந்திடுவேன்.
அடிமையாகவா?
ஆண்டானாகவா?
பூரணம் நிறைந்ததொரு சுதந்திரப்
பறவையாகவா?
இசை பாடிடுமெழிற் புள்ளாகவா?

கட்டுக்களற்ற உலகம்.
கவலைகள் இல்லை.
சட்டங்களற்ற உலகம்.
சோகங்கள் இல்லை.

ஒளித்தோழர்கள் வெட்கி
ஒளிப்பர் என் பின்னே.
பால் வீதிகளில்
பறந்து மீள்வேன்.
பெருமிதம் பொங்கும்.

நோக்கங்கள் விளங்கும் வாழ்வு.
தாக்கங்கள் இல்லை தானே.
ஏக்கங்கள்  இல்லை தா\னே.

தனிமைகளின் சாம்ராஜ்யங்களில்
கட்டுண்டு கிடந்திடுவேன்.
அடிமையாகவா?
ஆண்டானாகவா?
பூரணம் நிறைந்ததொரு சுதந்திரப்
பறவையாகவா?
இசை பாடிடுமெழிற் புள்ளாகவா?

**58.** தீக்கோழிகளே தலையை வெளியே எடுங்கள்..

தீண்டாமை இல்லையாம்.
நம் மண்ணில்
தீண்டாமை இல்லையாம்.

தரை மணலில் முகம் புதைக்கும்
தீக்கோழிகளே ,தீக்கோழிகளே
தலையை வெளியே எடுங்கள்.
தலையை வெளியே எடுங்கள்.
தீக்கோழிகளே
தலையை வெளியே எடுங்கள்..

இளையவரே.
இனியும் வேண்டாம் இந்நிலை
இம்மண்ணில்
என்று எடுத்துரையுங்கள்.
எடுத்துக் காட்டுங்கள்.
வர்ணமற்ற மண்ணே என்று
வாழ்ந்து காட்டுங்கள்.

தீண்டாமைப் பேய்க்குச்
சாவுமணி அடியுங்கள்.
சாவுமணி அடியுங்கள்.
சாவுமணி அடியுங்கள்.

தீக்கோழிகளாய் இருக்காதீர்.
தலையை மணலில் புதைக்காதீர்.
தீக்கோழிகளாய் இருக்காதீர்.
தலையை மணலில் புதைக்காதீர்.
தலை புதைத்தால்
தெரியாது. புற உண்மை
புரியாது. புற உலகம்

தலையை வெளியே எடுங்கள்
தலையை வெளியே எடுங்கள்
புற உலகம் பாருங்கள்.
புற உலகம் காணுங்கள்.

தீண்டாமைப் பேய்க்குச்
சாவுமணி அடியுங்கள்.
சாவுமணி அடியுங்கள்.
சாவுமணி அடியுங்கள்.

தீக்கோழிகளாய் இருக்காதீர்.
தலையை மணலில் புதைக்காதீர்.
தலை புதைத்தால்
தெரியாது. புற உண்மை
புரியாது. புற உலகம்

தீக்கோழிகளாய் இருக்காதீர்.
தலையை மணலில் புதைக்காதீர்.
தலை புதைத்தால்
தெரியாது. புற உண்மை
புரியாது. புற உலகம்

**59.** யாழ் இந்து நினைவுகள்

வானம் தெரியும் ஜன்னல்.பார்த்தபடி
மோனத்தில் ஆழ்ந்திருக்கின்றேன்.
ஆழ்ந்தபடி அசை போடுகின்றேன்.
அன்று நான் படித்த யாழ் இந்துவை.

யாழ் இந்துவென்றால் பல நினைவு.
யாழ் இந்துவென்றால் பல நினைவு.

விளையாட்டு மைதானத்தில் நடந்த போட்டிகள்
வலம் வரும் நினைவுச் சுழலில்.
துடுப்பெடுத்தாட்டம் , உதைபந்தாட்டம்
இரண்டுமே இன்பம் தந்த
இனிய நாட்கள்.

குகன், சூரியின் ஹிட்ஸ்
வேகப்பந்து வீச்சாளன் நிருத்தானந்தன்
வசந்தன் டட்டடாங்

கீப்பர் புவிராஜசிங்கம், பாபு,
கோல் கீப்பர் தில்லை,
நீளம் பாய்தலில்,
நீண்ட தூரம் shot put
ஈட்டி எறிதலில்
இன்றும்
நினைவில் நிற்கும்
நரேனின் சாதனைகள்.

விமலதாசனின் டொச்சிங்
வியக்க வைக்கும் கண்ணாடி ராஜேந்திரன்
வேகத்துடன் அடிக்கும் கோல்கள்

மறக்க முடியுமா?
மறக்க முடியுமா?

சிறகடிக்கும் நினைவில்
கிறங்க வைக்கும் ஆளுமைகள்.

சந்தியாப்பிள்ளை
சிவஞான சுந்தரம்
சுந்தரதாஸ் , மரியதாஸ்
சபாலிங்கம்,
சமயச் சோமர்,

சோமசேகர சுந்தரம், கனகரத்தினம்,
கெமிஸ்றி முத்தர், ஆறுமுகசாமி,
அமைதிமிகு துரைராஜா, குமாரசாமி
புண்ணியமூர்த்தி படிப்பிக்கும் பாங்கு.
மகேஸ்வரன், மகேந்திரன்
மகேசன் சிவராசா, சிவராமலிங்கம்
கந்தப்பிள்ளை, கணபதிப்பிள்ளை

மறக்க முடியாத மாஸ்டர்கள்.
மறக்க முடியாத  மாஸ்டர்கள்.

சொக்கன் , தேவன்
செங்கை ஆழியான்
செம்பியன் செல்வன்
சுதாராஜ்

என்று எழுத்தாளர் படித்த பள்ளி.
எம் நினைவில் நிற்கும் பள்ளி.

குமாராசாமி ஹோல், அருகில்
கிறங்க வைக்கும் ரட்னவாசா

விளையாட்டு மைதானத்து வைரவர்
பழைய மாணவன் சீனியின்
பாத யாத்திரை, கதிர்காமத்துப்
பாத யாத்திரையும் தீக்குளிப்பும்

நினைவில் சிறகடிக்கும் யாழ் இந்து
நினைவில்  கிறங்க வைக்கும் யாழ் இந்து

எங்கள் காலத்து யாழ் இந்து நினைவுகளில்
இன்று மூழ்கையில்
விளைவது இன்பமே.
விளைவது இன்பமே.

வானம் தெரியும் ஜன்னல்.பார்த்தபடி
மோனத்தில் ஆழ்ந்திருக்கின்றேன்.
ஆழ்ந்தபடி அசை போடுகின்றேன்.
அன்று நான் படித்த யாழ் இந்துவை.

**60.** இருப்பதிகாரம்

வானினை நிலவினை வரையினை மடுவினை
தேனினை யொத்த சொல்லினை உதிர்க்கும்
அணங்கினை அகன்ற இடையினைத் தனத்தினை
மீறிட முடியா சிந்தையை மேலும்
தேனிசை சிற்பம் சித்திரம் கலைகள்
மொழியும் இனமும் மண்ணும் பொன்னும்
குதலைக் குறும்பும் அன்பும் சிரிப்பும்
ஆட்டியே வைக்கும் மீட்சி யுண்டா?
என்றென் துயரும் பிடிப்பும் சாகும்?

விரியும் அண்டம் அடக்கும் அண்டம்
அதனை அடக்க மற்றோர் அண்டம்.
வெறுமை வெளியில் பொருளின் நடனம்.
இதற்குள் துளியெனக் கரையும் இருப்பு.
இதுவும் நிசமா? நிழலா? கனவா?
நனவும் கனவா? கனவும் நனவா?

விடைகள் நாடித் தொடரும் வினாக்கள்.
விடைகள் அற்ற வினாக்கள்! வினாக்கள்!

இருப்பு அறிந்திட தேடித் தொடரும்
இருப்பே எந்தன் வாழ்வே வாழ்வே!
இதனை அறிதல் புரிதல் எவ்விதம்?

நூலினைக் குருவினை அறிவினை உணர்வினைக்
கோளினைச் சுடரினை வெளியினை விரிவினை
வாழ்வினைத் தாழ்வினைத் துயரினை மகிழ்வினை
அறிதல் எவ்விதம்? புரிதல் எவ்விதம்?

கலவிக் குலாவி இருந்திடும் அவைகளாய்
இருந்தே இருப்பின் இவ்வித இடரெலாம்
இல்லாது ஒழிந்து இருந்தன்றோ இருக்கும்?

செயற்கை சமைத்திட சிந்தை தந்த
செயலினால் தானோ செகத்தினில் துயரோ?

அன்பினை ஆக்கிட அறிவினைப் பாவிக்க
என்னவர் உன்னவர் நம்மவர் மறந்திட்ட
பண்பினால் தானோ பாரினில் பகைமை?

தாமரை இலைமேல் தண்ணீர் போன்று
தரணியில் வாழ்ந்திடும் பக்குவம் கொண்டு

நானினைச் சித்தினை அசித்தினை அறிந்து
விருப்பு விட்டு வாழ்ந்திடும் தன்மை
வந்திடு மென்றால் அதுவே போதும்.

அந்திக் கதிரின் சிவப்பில் நாளும்
சிந்தை இழந்து இருத்தல் இன்பம்!

இரவில் வானில் நீந்தும் மீன்கள்
வரவில் இதயம் மூழ்கிக் களிக்கும்.
விசும்பும் மதியும் கதிரும் காற்றும்
புள்ளும் மற்றும் இருக்கும் அனைத்தும்
படைப்பின் திறனை பறையே சாற்றும்.

இன்ப வெள்ளம் மடையை உடைக்கும்.
கூகைகள் உலாவிடும் நள்யாமப் பொழுதும்
அகத்தினில் உவப்பினை ஏற்றி வைத்திடும்.

உறவினை உதறி உண்மை அறிதல்
துறவென ஆயிடும் அதனால் அதனை
ஏற்றிடேன் ஆனால் உள் இருந்தே
உண்மை காணலே சிறந்ததோ அறியேன்.
எவ்விதம் இருப்பின் உண்மை அறிவேன்.
உளையும் உளத்தின் உளைவை எவ்விதம்
தணிப்பேன் தணித்துப் பதிலை அறிவேன்?

**61. கண்ணா!**

கண்ணா,
சொல்லவிந்து ஊர் துஞ்சும்
நள்யாமப் பொழுதுகளில்
உன் நினைவால் வாடுகின்றேன்.
எனையே நான் சாடுகின்றேன்.

கண்ணா
முதற் பார்வையில் மயங்கினேன்.
அதற்காகவே இன்று வாழ்கின்றேன்.
எதற்காக இந்தச் சந்திப்பு?
எதற்காக இந்தச் சிந்திப்பு?

கண்ணா,
பொழுதெல்லாம் உன் நினைப்பு.
எழுமே நெஞ்சினில் உன் வனப்பு.
வாழ்வதெல்லாம் உனக்காகத் தானே.
வீழ்வதும் உன்னுடன் தான்.

கண்ணா,
விரிவானில் தொலைதூரம் நீந்திடுவோம்.
எரிசுடர் வெளியெல்லாம் பூந்திடுவோம்.
நட்சத்திரத் தோழருடன் ஆடிடுவோம்.
நிலவுப் பெண்ணுடன் பாடிடுவோம்.

கண்ணா,
காலம் நீயென்றால் , வெளி நானன்றோ.
வெளி நீயென்றால், காலம் நானன்றோ.
காலவெளி நாமன்றோ கண்ணா.
காலவெளி நாமன்றொ கண்ணா.

**62.** நான் பிரபஞ்சத்துக்  குழந்தை

நான் பிரபஞ்சத்துக்  குழந்தை
நான் பிரபஞ்சமெங்கும் அலைவேன்.
நான் பிரபஞ்சமெங்கும் திரிவேன்.
நான் பிரபஞ்சத்துக் குழந்தை.

நட்சத்திரங்கள் கண்டு மகிழ்வேன்.
நர்த்தனமிடுவேன். நகைப்பேன்.

நிலாக் கண்டு மகிழ்வேன்.
நிலவொளியில் குளிப்பேன்.
கும்மாளம்
அடிப்பேன்.

காலவெளிக் குழந்தை நான்.
காலவெளியின் பகுதி நான்.
காலவெளியாய்க்
களிப்பேன். மிகவும்
களிப்பேன்.

**63.** என் பிரியம் மிகு யாழ்  மண்ணே!

யாழ் மண். பிரியம் மிகு
யாழ் மண்ணே.
உணர்வுடன் கலந்த யாழ் மண்ணே.
உள்ளத்தில் நிலைத்திருக்கும் யாழ் மண்ணே.
எப்படி மறப்பேன் உன்னை
எப்படி மறப்பேன். உன்னை

நான் பிறந்த மண் நீ.
நான் தவழ்ந்த மண்.
நான் உருண்டு , புரண்ட மண் நீ.
நான் எழுந்த மண் நீ.
நான் இளமைக்கனவு கண்ட மண் நீ.
என் இனிய யாழ் மண்ணே!
எப்படி மறப்பேன் உன்னை
எப்படி மறப்பேன். உன்னை

எம் வரலாற்றின் சாட்சி நீ.
எம் வரலாற்றில் நீ சந்தித்த
களங்கள், போர்க்களங்கள் எத்தனை.
தாழ்ந்த போதெல்லாம் மீண்டும் நீ
மேலெழுந்தாய்.
மேலெழுந்து நிலைத்து நின்றாய்.

எரிக்கப் பட்ட போதெல்லாம்
எழுந்து நின்றாய்.
உறுதியுடன் உயர்ந்து நின்றாய்.
உத்வேகம் தந்தாய்.

இளம் பருவத்தில்
உளம் மகிழ்ந்து திரிந்தேன்
யாழ் மண் மீது.
எப்படி மறப்பேன் உன்னை
எப்படி மறப்பேன். உன்னை

பண்ணைக் கடற்கரை,
புல்லுக்குளம்,
பொதுசன நூலகம்
முற்றவெளி,
மணிக்கூட்டுக் கோபுரம்

காட்சிகள் விரியும்

கண் முன்னே.
எப்படி மறப்பேன் உன்னை
எப்படி மறப்பேன். உன்னை

முற்றவெளித் தேர்தல் கூட்டங்கள்
மக்கள் திரண்ட தேர்தல் கூட்டங்கள்.

தானைத்தலைவர் அமிர், அவர்
தாங்கிப் பிடிக்கும் தந்தை செல்வா
இரத்தப் பொட்டிடும் இளவல்கள்

மனத்தில் மறக்க முடியாக் காட்சிகள்.
நினைத்துப் பார்க்கின்றேன்.
மண்ணே! யாழ் மண்ணே!
எப்படி மறப்பேன் உன்னை.
எப்படி மறப்பேன் உன்னை.

நகரில் திரிந்த பொழுதுகள்
நகரில் களித்த திரையரங்குகள்
நகரில் சுகித்த உணவகங்கள்
நகரில் அருந்திய பானங்கள்

றிக்கோ, சுபாஷ், பிளவுஸ்
லிங்கம் கூல் பார்
மொக்கங், ஆசாத் கபே
எப்படி
மறப்பேன் உன்னை.
எப்படி
மறப்பேன் உன்னை.

யாழ்ப்பாணம் என்றால்
யாழ்தேவி நினைவு வரும்.
யாழ்ப்பாணம் என்றால்
யாழ் கூழ் நினைவு வரும்.
கிடுகு வேலி நினைவு வரும்.
கிட்டிப்புள் நினைவு வரும்.
காற்றில் தலைவிரிக்கும் பனை,
கமுகு ,தென்னை நினைவு வரும்.
சுற்றம் கூவி அழைக்கும் ஊரின்
உற்ற நட்புக்காகம் நினைவு வரும்.

என் பிரிய யாழ் மண்ணே.
எப்படி மறப்பேன் உன்னை.
எப்படி மறப்பேன் உன்னை.

யாழ் மண்ணே நீ வாழி.
யாழ் மண்ணே நீ வாழி.
யாழ் மண்ணே நீ வாழி.
யாழ் மண்ணே நீ வாழி.